மேழிச்செல்வம்

(P) series
R. R. No. 128/66.
MADRAS ... EGMORE, MADRAS 8
37634/66



பராபவ ஹ. ஆடி மீ. (1966 ஜூலை-ஆகஸ்ட்) விலை 25 பை.

21—6—1966 ஆன்று இந்திய அரசாங்கம் பர்மா அரசாங்கத்திற்கு ஒரு டன் நெல் வடீடி 27 விதை பரிசளித்தது. பரிசை ராஜாஜி மன்றத்தில் நடந்த விழாவின்போது, பர்மிய வைஸ்-கான்சல் திரு. பாட்டேயிடம் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அளிக்கிருர்.

மாநில விவசாயப் பொறியாளர் ஒர்க்ஷாப்பில் 20—6—1966 அன்று பொறியிய லாளருக்கும், சூப்பர்வைசர்களுக்கும் நவீனமான டிரில்லர் முதலிய எந்திரங்களில் பயிற்சியை மாநில விவசாய நெறியாளர் கே. வி. ராமநாதன் அவர்கள் துவக்கி வைக்கிருர்.

நாடு கடந்து செல்லும் ஏடிடீ, 27.

ஏடிடீ. 27 நெல்லின் மகசூலிலும் குணங்களிலும் நமக்கு மட்டுமல்ல, கடல் கடந்த பர்மா நாட்டு மக்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நமது தமிழகத்தின் குறுவைப் பருவம் போலவே ஜுன் முதல் செப்டம்பர் வரை நெல் பயிருக்காக நீடிக்கும் பருவம் பர்மாவிலும் உண்டு. இந்தப் பருவத்தில் பர்மாவிலும் ஏடிடீ. 27 நன்கு வளரும், விளையும் என்று திட்டமாக நம்பலாம்.

அரிசியைப் பொறுத்த வரை உலகிலே உபரி நாடுகளில் ஒன்று பர்மா. இருந்தும் இன்னும் உற்பத்தியை மிகுந்த அளவு பெருக்குவது பற்றுக்குறை நாடுகளிலுள்ள கோடானுகோடி மக்களின் பசி போக்க உதவும் என்ற நல்ல எண்ணத்தோடு அதிக மகசூல் வித்தான ஏடிடீ. 27 நெல்லைப் பயிரிட முன்வந்துள்ளது. அதற்கு முதல் மாதிரியாக ஒரு டன் ஏடிடீ. 27 விதை நெல்லை இந்திய அரசாங்கம் பர்மா அரசாங்கத்திற்குப் பரிசாக அளித்தது. இந்த வரலாற்றுச் சிறப்பான விழா 1966-ம் ஆண்டு ஜுன் மாதம் 21-ம் தேதியன்று சென்னை ராஜாஜி மன்றத்தில் நடைபெற்றது.

விழாவில் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் பர்மிய வைஸ்-கான்சல் திரு. பா. ட்டேயிடம் ஏடிடீ. 27 நெல்லை ஒப்படைத்தார். விவசாய அமைச்சர் திரு. கக்கன், அரசினரின் தலைமைக் காரியதரிசி திரு. C. A. ராமகிருஷ்ணன், விவசாயத் துறை காரியதரிசி திரு. வி. கார்த்திகேயன், விவசாய நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"ஏற்கனவே இந்தியாவுக்கு அரிசியை மிகுந்த அளவில் வழங்கிக்கொண்டிருக்கும் பர்மா இந்த ஏடிடீ. 27 மூலம் இன்னும் அதிகப்படியாக வழங்கும் சக்தியைப் பெறும்; இவ்விழா நம் இருநாடுகளிடை நிலவும் நல்லெண்ணத்தின் அறிகுறி" என்றார் விவசாயத் துறை அமைச்சர் திரு. கக்கன் அவர்கள்.

"எங்களுக்காகப் பர்மாவில் வளரப்போகும் அரிசி இந்த ஏடிடீ. 27" என நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் விவசாயத்துறை காரியதரிசி வி. கார்த்திகேயன் அவர்கள்.

உள்ளுரை

		பக்கம்
1.	பொறுக்கு விதை வெற்றிக்குத் திறவுகோல்.	5
2.	புதிய தென்னந் தோப்புகள் ஏற்படுத்தக் கடன் உதவி.	8
3.	ஏடிடீயின் பாடல்	9
4.	விவசாயச் செய்திக் கதிர்	11
5.	தொழு உரமே தொழு உரம்	13
6.	விதை தெரிந்தனர் விந்தை கண்டனர்.	15
7.	வானொலிச்செய்திகள்	17
8.	கேள்வியும் பதிலும்	20
9.	மண்வளமே மனைவளம்	22
10.	கரும்பிலே கரிப்பூட்டை	27
11.	பூசா சவானி வெண்டை வெற்றிக் கதை.	28
12.	1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய காலநிலை அறிக்கை.	29

விளம்பரங்கள் :

வால்டாஸ்	4
ஐ.சி.ஐ.	12
ராமகிருஷ்ணா வாட்டர் டிவைனர்	14
கஜலக்ஷ்மி கலப்பு உரங்கள்	16
கந்தசாமி வாட்டர் டிவைனர்	26
ராஜா பண்ணைத்தோட்டம்	27

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும்,
அதிகமான
விளைச்சல்களுக்கும்





டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்த வெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிர்மாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங்க் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் விப்டு), முப்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடெட்

எர்த் மூவிங், மைனிங் அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்

பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புது டில்லி • பெங்களூர்
லக்னோ • கொச்சின் • அஹமதாபாத் • ஸெகந்திராபாத்
பாட்னு • நாக்பூர் • போபால் • சண்டிகர் • ஜெய்பூர்

everest/618Ar/VOL tm,

மேழிச்செல்வம்

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மலர் 23	பராபவஹு ஆடிமீ 1966—ஜூலை-ஆகஸ்ட்	இதழ் 7

பொறுக்குவிதை—வெற்றிக்குத் திறவுகோல்

(திரு எஸ். சுலைமான், கூட்டு நெறியாளர்—விவசாயத் துறை).

சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும். அதுபோல் நல்ல விதைகளைக்கொண்டுதான் உயர்ந்த மகசூல் தரும் பயிரைச் சாகுபடி செய்ய முடியும். நல்ல விதையே வெற்றிகரமான விவசாயத்தின் அடிப்படை. இத்தகைய அடிப்படை முக்கியம் வாய்ந்த விதைகளின் தரங்களை, திறங்களை உயர்த்த பல ஆண்டுகள் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. அவைகளின் பயனாக இன்று பல்வேறு பயிர்களுக்கும் பொறுக்கு விதைகள் விவசாயத் துறையால் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன.

பொறுக்கு விதை என்றால் என்ன

பொறுக்கு விதை என்பதைப் பொதுவாக (1) உயர்ந்த விளைச்சல் திறன்கொண்ட விதை, (2) அவ்வப் பகுதியில் பழக்கத்தில் உள்ள மற்ற விதைகளைக் காட்டிலும் உயர்ந்த சிறப்பியல்புகள் பொருந்திய விதை என்று சொல்லலாம். பொறுக்கு விதைகள் சாதாரணமாக 15 சத வீதத்திற்கு மேல் விளைச்சலை அதிகரிக்கின்றன. மற்ற சிறப்பியல்பு என்பவை (1) மண், சீதோஷ்ண நிலைக்குப் பொருந்தியமைவது, (2) பூச்சி நோய்த் தாக்குதல் சகிப்புத் தன்மை, (3) தூய்மை, (4) உண்பதற்கும், உபயோகிப்பதற்கும் நல்ல ருசியும் குணமும் பொருந்தியமை ஆகியவை.

பொறுக்கு விதைகள் எவ்வாறு உற்பத்தியாகின்றன

பொறுக்கு விதைகள் உற்பத்தி முறைகளை மூன்றாகப் பிரிக்கலாம் :—

(1) உயர்வழித் தேர்வு முறை.

(2) கரு இணைப்பு முறை.

(3) உருமாறல் முறை.

ஏ.எஸ். டி-5, ஏடிடீ-1, 2, கோ.-4, ஏ.எஸ்.டி. 13, டீ.என். ஆர். 1, போன்ற நெல் ரகங்களும், டீ.எம்.வி. 2 நிலக்கடலை போன்ற பொறுக்கு வித்துகள் உயர்வழித் தேர்வுமூலம் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

கரு இணைப்பு முறையில் உண்டான விதையை வீரியத் தன்மை வாய்ந்த ரகங்கள் (Hybrids) என்றும், மற்ற ரகங்கள் என்றும் பிரிக்கலாம். சி.எஸ்.எச். 1 சோளம், எச்.பி.-1 கம்பு போன்றவை வீரிய ரகங்களாகும். இந்தோ ஜப்பானிகா கலப்பின நெல்லான ஏடிடீ-27, ஏடிடீ 28 போன்ற நெற்கள் கரு இணைப்பு முறையால் கிடைத்த சிறந்த மற்ற ரகங்களாகும்.

இம்மாநிலத்திலுள்ள பலதரப்பட்ட நிலைகளுக்கேற்ப பொறுக்கு விதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வறட்சி, களர், உவர்ப்புத் தன்மை, முதலிய நிலைகளுக்கேற்பவும், அதிக உரமேற்றுக் கூடுதல் விளைச்சல் கொடுக்கவல்ல சிறப்பியல்புகள் கொண்டதுமான பொறுக்கு ரக விதைகள் பலவும் உற்பத்தி செய்யப்பட்டு சாகுபடிக்குச் சிபாரிசு செய்யப்படுகின்றன.

விதை பெருக்கத் திட்டங்கள்

விதைப்பண்ணைகள்

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுக்கு விதைகளை மாநில முழுவதும் பரப்ப பின்வரும் வழிமுறை மேற்கொள்ளப்படுகிறது.—

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் அல்லது மண்டல ஆராய்ச்சிப் பண்ணைகளில் மூல விதைகள் (Nucleus seeds) உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த மூல விதைகள் மாநில விதைப் பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டு அங்கே பெருக்கம் செய்யப்படுகின்றன. மாநில விதைப் பண்ணைகளில் பெருக்கப்படும் விதையைப் பிரதான விதை என்கிறோம். இவ்வாறு பிரதானப் பொறுக்கு விதை உற்பத்தி செய்வதற்காக நம் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் 74 இடங்களில் 200 விதைப் பண்ணைகள் அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளன. ராணிப்பேட்டைக்கருகே நவ்லக் என்ற இடத்தில் 75 ஏக்கர் பரப்பளவு கொண்ட பண்ணையை 600 ஏக்கர் கொண்ட பெரும் பண்ணையாக விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நெல், தானியங்கள் மட்டுமல்ல, உருளைக்கிழங்கு, காய்கறி விதைகள், பயறு வகைகளின் பொறுக்கு ரகங்களும் மாநில விதைப் பண்ணைகளில் பெருக்கப்படுகின்றன.

கிராம சகாயத் திட்டம்

பொறுக்கு விதை கிராம விவசாயிகளுக்குப் பரந்த அளவில் கிடைக்கச் செய்வதற்காக மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் நிலை விதை கிராமங்களிலேயே முற்போக்கான விவசாயிகள் சிலரிடம் ஒப்படைக்கப்படுகிறது. பொறுக்கு விதையைப் பெருக்குவதற்காகப் பஞ்சாயத்துக்கள் கவனத்துடன் இந்த முற்போக்கு விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. இவர்களுக்கு ''கிராம சகாயக்குகள்'' என்று பெயர். இவர்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

இந்த கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்யும் இரண்டாம் நிலை விதைகள், பஞ்சாயத்து நிர்ணயித்த விலையில், பஞ்சாயத்தால் குறிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன. இரண்டாம் நிலை விதைகளை கிராம சகாயக்குகளிடமிருந்து விதைப்புப் பருவத்திலோ அல்லது வேண்டுமானுல் முன்னதாகவோ விவசாயிகள் வாங்கிக்கொள்ளலாம்.

கிராம சகாய திட்டம் நடைமுறை

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நெல், தானியங்கள் விளை நிலப்பரப்பு முழுவதிலும் மூன்று ஆண்டுகளில் பொறுக்கு விதைகளைப் பரப்பிவிட வேண்டும் என்பது திட்டத்தின் நோக்கம். ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு பயிரிலும் 1/3 நிலத்திற்குப் பொறுக்கு விதை கிராம சகாயக்குகளிடமிருந்து வினியோகிக்கப்படும். முதலாண்டு பொறுக்கு விதை (கிராம சகாயக் விதை) பெற்ற முதல் 1/3 பகுதி நிலம் மீண்டும் நான்காவது ஆண்டில் பொறுக்கு விதை பெறும். இத்திட்டத்தால் எல்லா மாவட்டங்களிலும் மக்கள் பொறுக்கு விதையின் அவசியம் பற்றி நன்கு அறிந்துகொண்டனர். பொறுக்கு விதைகள் இப்பொழுது அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

கிராம சகாயக் திட்டத்தில் உள்ள நடைமுறைக் கஷ்டம் விதைகளை மாதக் கணக்கில் இருப்பு வைப்பதில் உள்ளது. இக்கஷ்டத்தை அகற்றும் பொருட்டு, மதுரை, செங்கற்பட்டு மாவட்டங்களில் முன்னேடித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முன்னேடித் திட்டப்படி, கிராம சகாயக்குகளிடமிருந்து அறுவடையானதும் விதைகளைக் கூட்டுறவு சங்கங்கள் வாங்கி, அடுத்த விதைப்புக் காலம் வரை பாதுகாத்து வைக்கின்றன. விதைப்புப் பருவத்தில் திட்டமிட்டபடி விவசாயிகளுக்கு விதைகளை வழங்கும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், தீவிர சாகுபடித் திட்டம் நடைபெறும் சில வட்டாரங்களில் தேர்ந்தெடுத்த விவசாயிகளின் பண்ணைகளில் விதை உற்பத்தி செய்யும் முன்னேடித் திட்டம் ஒன்றும் செயலில் இருக்கிறது. இந்த விதைப் பண்ணைகளை 'வட்டார விதைப் பண்ணைகள்' என்று அழைக்கிறோம். இவை சுமார் 50 ஏக்கர் பரப்பளவு கொண்டவையாக இருக்கும். ஆண்டுதோறும், இப்பண்ணைகளில் உற்பத்தியாகும் விதைகளைக் கூட்டுறவு சங்கங்கள் விலைக்கு வாங்கி, பதப்படுத்தி, இருப்பு வைத்து, பின்னர் திட்டமிட்டபடி, விவசாயிகளுக்கு வினியோகிக்கின்றன.

விதைக் கார்ப்பரேஷன்

இராம சகாயக் திட்டம் செயல்படுவதில் நடைமுறைச் சிக்கல்கள் பல இருக்கின்றன. அதனுல் இத்திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றிகரமாக இயங்கவில்லே. ஆகவே, முதல் நிலே, இரண்டாம் நிலேப் பொறுக்கு விதைகளே உற்பத்தி செய்து விநியோகிக்கும் வேலேயை விதைக் கார்ப்பரேஷன் எடுத்துச் செய்யும் ஒரு முன்னேடித் திட்டத்தை ஒரு மாவட்டத்தில் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. விதைக் கார்ப்பரேஷன் அரசாங்க விதைப் பண்ணேகளில் முன்போலவே முதல்நிலே விதைகளே உற்பத்தி செய்யும். இரண்டாம் நிலே விதைகளே உற்பத்தி செய்வதற்கு நல்ல விவசாயிகளேக் கார்ப்பரேஷன் தேர்ந்தெடுக்கும். இந்த விவசாயிகள் விதைக் கார்ப்பரேஷனிடமிருந்து முதல் நிலே விதை பெற்று, அதை இரண்டாம் நிலே விதையாகத் தங்கள் பண்ணேகளில் பெருக்கித் தருவார்கள். இந்த விதைப் பண்ணே விவசாயிகளுக்கு கார்ப்பரேஷன் கடன் வசதியும், திருந்திய சாகுபடி முறைகளுக்குத் தங்கள் அலுவலர்கள் மூலம் தொழில் நுணுக்க உதவிகள் யாவும் அளிக்கும். இவ்வாறு உற்பத்தி செய்த விதைகளே கார்ப்பரேஷனே வாங்கி, பதப்படுத்தி, இருப்பு வைத்து, தனியார் துறை ஏஜெண்டுகள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவற்றின் மூலம் விற்பனே செய்யும். இக்கார்ப்பரேஷன் உற்பத்தி செய்யும் விதைகளே கோயமுத்தூரில் உள்ள விவசாயத் துறையைச் சேர்ந்த விதைப் பரிசோதனே நிலேயத்தில் பரிசோதித்து தரச் சான்றிதழ் வழங்கப்படும். தரச்சான்றிதழ் பெற்ற விதைகளேயே கார்ப்பரேஷன் வினியோகிக்கும்.

பொறுக்கு விதைகளின் தரத்தைப் பேணுதல்

பொறுக்கு விதைகளேப் பயிர் செய்யும்போது நாளாவட்டத்தில் பல காரணங்களால் தரம் குறைய ஏதுவாகிறது. பரியிடையே வேறு ரக விதைகள் கலந்து முளேத்துவிடுதல், அறுவடை செய்தபின் களங்களில் வேறு விதை கலந்துவிடுதல், களேகளின் விதைகள், மண், தூசு, கற்கள் போன்றவை கலப்பது ஆகியவை விதைகளின் தரத்தைப் பெருமளவு பாதிக்கும். பொறுக்கு விதைகளின் உண்மையான சிறப்புக் குணங்கள் மாருமல் உள்ளனவா என்பதைப் பரிசோதிப்பது ஒவ்வொரு விவசாயியின் கடமை. இந்த முக்கியமான வேலேயில் விவசாயிகளுக்கு உதவுவதற்கென்றே கோவை விவசாயக் கல்லூரியில் விதைப் பரிசோதனேச் சாலேயில் விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாகப் பரிசோதனே செய்யப்படு கின்றன. சுமார் ஒரு கிலோ விதை எடுத்து அனுப்பினுல் போதும். விதைப் பரிசோதனேயால் விதையின் வீரியம், முளேப்புத் திறன், கலந்துள்ள தூசு, மண், கற்கள் முதலியவற்றின் அளவு, பூச்சி, நோயால் ஏற்பட்டிருக்கும் சேதம், விதைகளின் ஈரம் முதலியவை நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த விபரங்களே விதைப்பதற்கு முன் தெரிந்துகொள்வது மிகவும் நல்லது.

பல்வேறு விதைகள் தனி வியாபாரிகளாலும் விற்பனே செய்யப்படுகின்றன. இந்த மாதிரி தனி நபர்கள் விற்கும் விதைகளின் தரத்தைத் தணிக்கை செய்து, தரச் சான்றிதழ் வழங்கச் சட்டமியற்ற மத்திய அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளே மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் எல்லாம் விதைகளின் தரம் கெடாமல் பாதுகாப்பதற்காகத்தான்.

விளேச்சலே உயர்த்தும்பொருட்டு வினியோகிக்கப்படும் பொறுக்கு விதைகளே விவசாயிகள் அனேவரும் பெருமளவில் உபயோகித்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வீரிய ஒட்டு விதைகளேக்கொண்டு விதைத்த பயிரிலிருந்து விவசாயிகள் விதை எடுக்காமல் மறுமுறை விதைப்புக்கு விவசாய இலாகாவிட மிருந்தோ, சர்க்காரால் நியமிக்கப்பட்ட வேறு நிறுவனங்களிலிருந்தோ வாங்கி உபயோகிக்க வேண்டும் மற்ற பொறுக்கு ரக விதைகளே மூன்று வருடத்திற்கொரு முறை புதிய விதைகளாகப் பெற்று உபயோகிக்க வேண்டும். விதைகளே விதைக்கு முன் விதைச் சோதனேக்கனுப்பி அவற்றின் தரமறிந்து உபயோகப்படுத்தவும் அனேவரும் பழகிக்கொள்ள வேண்டும். விவசாயத்துக்கு அடிப்படையான விதைகளின் முக்கியத்துவத்தை எல்லா விவசாயிகளும் உணர்ந்து தரமான பொறுக்கு விதைகளே உபயோகித்து உற்பத்தியைப் பெருக்குவதை நமது விவசாயிகள் நாட்டுக்குச் செய்யும் கடமையாகக் கருதுவார்களாக.



புதிய தென்னந்தோப்புகள் ஏற்படுத்தக் கடனுதவி

நாலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ் நாட்டில் 10,000 ஏக்கரில் புதிதாக தென்னந்தோப்புகள் ஏற்படுத்துவது தமிழக அரசாங்கத்தின் திட்டம். அதற்கு விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு அரசாங்கம் நீண்ட காலக் கடனுதவி அளிக்கிறது. கடன் வசதிகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுகிறோம்.

திட்டம் என்ன?

* நாலாவது திட்டத்தில் புதிய தென்னந்தோப்புகள் ஏற்படுத்த இலக்கு 10,000 ஏக்கர்.
* 1966–67-ம் ஆண்டுக்கான இலக்கு 2,000 ஏக்கர். இந்த 2,000 ஏக்கர் முழுமைக்கும் கடன் வசதி கிடைக்கும்.
* 1966–67-ம் ஆண்டுக்கு புதிய தென்னந்தோப்புகள் ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கடன் வசதி மதிப்பு ரூ. 6,00,000 (ஆறு லட்சம் ரூபாய்).

தெரிந்து கொள்ளுங்கள்:—

1. இது ஒரு நீண்ட காலக் கடன்.
2. தக்காவிக் கடன் வழங்கும் முறையிலேயே இக் கடனும் வழங்கப்படும்.

* தனி விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 300 வீதம் கடன் வழங்கப்படும்.
* ஒரு விவசாயி அதிக பட்சம் ரூ. 3,000 கடன் பெறலாம்.
* கடன் திருப்பிக் கட்டுதல்:—முதல் தவணை கடன் வாங்கிப் பதினொன்றும் ஆண்டில் தொடங்கும்.
* பதினொன்றும் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளில் ஐந்து சமமான தவணைகளில் முழுக் கடனையும் செலுத்தி முடிக்க வேண்டும்.
* கடனுக்கு வட்டி அரசாங்கம் நிர்ணயித்த அளவில்.

கடன் வழங்குவது யார்?

1. **மாவட்ட விவசாய அதிகாரிகள்**—உங்களுக்கு வேண்டிய கடன் ரூ. 1,500 வரை இருக்கும்போது.
2. **தனித்துணை விவசாய டைரக்டர்.**—உங்களுக்கு வேண்டிய கடன் ரூ. 1,500-க்கு மேல் ஆகும் போது;

கடனுக்காக யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

* கடன் வேண்டுவோர் தங்கள் வட்டாரத்தில் உள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலர்க்கோ அல்லது தென்னை பெருக்க அலுவலர்க்கோ (Coconut Development Assistant.) குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும் (படிவம் தரப்பட்டுள்ளது.)
* விண்ணப்பத்துடன், கடன் வேண்டுபவருக்குரிய நிலச் சொத்துக்களின் சர்ட்டிபிகேட்டும் (தாசில்தார் கையொப்பத்துடன்) சால்வன்சி சர்ட்டிபிகேட்டும் இணைக்கப்படவேண்டும்.
* கடன் வேண்டுவோர் குத்தகை தாரராகவோ அல்லது கூட்டுப்பட்டா தாரராகவோ இருந்தால் நிலச் சொந்தக்காரர், அல்லது கூட்டுதாரர் சம்மத உரையைக் குறித்த படிவத்தில் பெற்று கடன் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

கடன் எவ்வாறு வழங்கப்படுகிறது?

* தோப்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய தென்னங் கன்றுகள் அரசினர் பண்ணையிலிருந்தே வழங்கப்படும். இது கடனில் பொருள் பகுதி. ஏக்கருக்கு 75 தென்னங்கன்றுகள் என்று கணக்கிட்டு, கன்றுகள் வழங்கியபின் அதன் மதிப்பு போக மீதித் தொகை ரொக்கமாக வழங்கப்படும்.
* கடன் பற்றிய மற்ற முறைகள் தக்காவிக் கடன் போலவே.

கடன் விண்ணப்ப படிவம்

சென்னை மாநிலத்தில் தென்னை சாகுபடிக்கு நீண்ட காலக் கடன் விண்ணப்பம்.

அனுப்புபவர்
முழு முகவரி.

பெறுபவர் :
மாவட்ட விவசாய அதிகாரி
..............மாவட்டம்.

சம்பந்தப்பட்ட விவசாய விஸ்தரிப்பாளர் அல்லது தென்னை அபிவிருத்தி அலுவலர் மூலமாக.

(14-ஆம் பக்கம் பார்க்கவும்)

ஏடீடியின் பாடல்

மாணிக்கம், வயற்பணியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம், தெள்ளாறு.

ஏடுரைக்கும் ஜியீபி இருபத்(து) நாலுக்கும்,
தேடிவந்த ஜப்பான் நெல் விதைக்கு மாகவே
ஆடுதுறைப் பண்ணையிலே பிறந்து விட்டேனே
ஏடீடி இருபத்தேழு என்றிடும் நானே.

எந்தனது வயது நூற்று ஐந்து நாட்கள்தான்
சிந்தை கொள்வீர் குறுவை, சொர்ண வாரியிலேதான்
முந்தையுற வளரும் பருவம் என்பதாகுமே
சொந்தமாகக் கதையைச் சொல்லக் கேட்டிடுவீரே!

ஒரு ஏக்கர் பயிர்செய்யும் முறையினை இங்கு
உங்களுக்கே கூறுகின்றேன் உற்றுக் கேளுங்கள்
பதினெட்டு கிலோவிதை ஏக்கர் ஒன்றுக்கு—இரு
பதினெட்டு கிராம் வேணும் அக்ரசான் மருந்து!

பன்னிரெண்டு சென்ட்டு வேணும் நாற்றங்காலுக்கு
மூனறு வண்டி கலவை எரு வேணும் அதற்கு.
நலமாக வளர்வதற்கு அக்ரசானுடன்
நாட்டமுடன் கலந்த பின்னர் விதைத்தல் சிறப்பு.

வளரும் நாற்று பசுமை யெய்தாச் குறையிருந்தாலே
செழுமைகாண அமோனியா ஆறு கிலோவை
திறமையாக நாற்றங்காலில் தூவி விட்டாலே
பெருமையாக வளர்ந்திடுவேன் மகிழ்ச்சியினுலே!

மூன்று வாரம் மூன்று நாட்கள் ஆனபின்னுலே
தோன்றிடுவேன் நடுவதற்கு ஏற்றதற்போலே.
நாற்று நடும் வயலையாக்கும் முறையதனையே—இனி
சாற்றிடுவேன் சிந்தையில் நீர் ஏற்றிடுவீரே.

நாட்டுயெரு பத்து வண்டி போட்டிடுவீரே,
போட்டுடுவீர் ஐந்து வண்டி தழையதனையே
ஏடீடி கலப்புரமும் இட்டிட வேணும்—இரு
நூற்று முப்பத்தைந்து கிலோ அளவிலே.

ஏடீடி 27 நெல்
குறுவைக்குச் சிறந்தது நிறைவாக விளைவது

நாற்றுநடும் வயலினிலே இவைகளைப் போட்டு
சேற்றினிலே பொட்டாஷிய உரமும் சேர்த்துதான்
நாற்று நடும் சமயத்திலே போட்ட பின்னாலே
ஏற்ற நல்ல வரிசை நடவு தொடங்கிடுவீரே !

நாற்றெடுக்கும் ஒருவார கால முன்னாலே
பாரதியான் தெளித்திடுவீர் பக்குவமாக
நாற்றுதனை பி.எச்.சி. (50%) கலவைதன்னிலே
தோய்த்திடுவீர் நடுமுன்னர் நலம் விளையுமே.

நடவு செய்து இரண்டு வாரம் ஆனபின்னாலே
இடை உழவு செய்திடுவீர் கல்ட்டி வேட்டரால்
மறுமுறையும் களையெடுப்பீர் கச்சிதமாக
நான்கு வாரம் இரண்டு நாட்கள் சென்ற பின்னாலே !

களையிரண்டு செய்யும்போது சிந்திரிஉப்பு—கிலோ
எழுபதென்ற கணக்குவைத்துப் போட்டிட வேணும்
நடவுசெய்து பதினைந்து நாட்கள் பின்னாலே
பாலிடாலோ எண்ட்ரினையோ தெளித்திடவேணும்.

இருமுறையும் சொன்னமருந்து தெளித்த பின்னாலும்
கருமையாக எந்தன் நிறம் இல்லையென்றாலே
நோய்வந்து தாக்கியது என்று எண்ணியே
தெளித்திடுவீர் பங்கிகாப்பர் பைட்டலான் அன்றே.

கலப்புக் கதிர் அகற்றிடுவீர் கவனத்தினாலே—நல்ல
குலக் கதிராய்ச் சேர்த்திடுவீர் முதிர்ந்த பின்னாலே
பலப்பலவும் சொன்னவாறு பண்ணிப்பாருங்கள்—பின்
மலைக்குவையாய்ச் சேரும் செந்நெல் மணியைப் பாருங்கள்.

எங்களுக்கும் கிச்சிலி போல் நல்லமதிப்பு—இனி
உங்களுக்கும் குறைவுஇல்லை ஏக்கர் ஒன்றுக்கு
நாற்பத்தைந்து மூட்டை ஆவோம் கட்டுக்கோப்பாக—நீர்
ஏற்றுச்செய்தால் சொன்ன முறை ஈதுஉறுதி

தேடி ஓடி காடுமேடு செப்பனிடுவீர்
ஏடீடி இருப்பத்தேழை எங்கும் பரப்புவீர்
நாடு வாழ, பசியும் நீங்க, நாங்கள் உறுதி
நாடும் விவசாயத்துறை ஏற்கும் உறுதி !

தென்னங்கன்றுகள் எங்கெங்கு கிடைக்கின்றன

விவசாயத் துறையின் தென்னை நாற்றங்கால்களில் 1966–ம் ஆண்டு ஜுன் மாத வாக்கில் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய தென்னை நாற்றுகள் இருப்பு கீழே கொடுக்கப்படுகிறது. தேவையுள்ள விவசாயிகள் தமக்கு அருகே உள்ள நாற்றங்காலில் உரிய விலை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மூலமும் வாங்கலாம்.

	தென்னை நாற்றுகள் கிடைக்கும் இடம்.	மாவட்டத்தின் பெயர்.	கிடைக்கும் நாற்றின் எண்ணிக்கை.
1.	சோழவந்தனம்	மதுரை	5,000
2.	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	11,500
3.	மூலவினூர்	தஞ்சாவூர்	7,000
4.	சிங்கம்புணறி	ராமநாதபுரம்	20,000
5.	செங்கோட்டை	திருநெல்வேலி	5,000
6.	வடகரை	திருநெல்வேலி	12,000
7.	பூதலம்	கன்னியாகுமரி	15,105
8.	ஆத்தூர்	செங்கல்பட்டு	14,000
9.	குடியாத்தம்	வடஆற்காடு	10,000
10.	திண்டிவனம்	வடஆற்காடு	8,900
11.	ஸ்ரீரங்கம்	திருச்சிராப்பள்ளி	10,000
12.	சேலம்	சேலம்	6,000
		மொத்தம்	1,23,605

ஒரு நாற்று விலை 90 பைசா.

ரயிலில் அனுப்புவதானால் கட்டி அனுப்பும் செலவுள்பட ஒரு நாற்றுக்கு7 பைசா வீதம் விலைக்குமேல் வசூலிக்கப்படும்.

தகவல்:—ஜி. துரைசாமி,
தென்னை விஸ்தரிப்பு அலுவலர்,
திருச்சி.

விவசாயச் செய்திக்கதிர்

(K. M. சுந்தரம், R. S. எர்னஸ்ட், விரிவினைப்பகுதி, விவசாயக் கல்லூரி, கோவை.)

பருத்தி.

பருத்தி விதைப்பிற்கான பருவம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள சில ஆராய்ச்சிக் குறிப்புகள் விவசாயிகளுக்குப் பயனளிக்கும்.

பருத்திக்கு தழைச்சத்து (நைட்ரஜன்) அடங்கிய இரசாயன உரங்கள்.

எம். சி. யூ. 3 பருத்திக்கு தழைச்சத்து உள்ள பலவகை இரசாயன உரங்களை உபயோகித்தால் மகசூலில் ஒவ்வொரு உரமும் வேறு வேறான பலன்களைக் கொடுக்குமா என்று அறிய நடத்திய சோதனையில் கிடைத்த மகசூல் குறிப்பு :— அம்மோனியம் சல்பேட், யூரியா, கால்சியம், அம்மோனியம் நைட்ரேட் ஆகிய மூன்று இரசாயன உரங்களும், பருத்திக்கு சமஅளவு பலனையே கொடுக்கின்றன.

டெல்டாப் பகுதிகளில் அமெரிக்கப் பருத்தி.

சென்னை மாநிலத்தில் உள்ள டெல்டா பிரதேசங்களில் கம்போடியாப் பருத்திக்கு ஒரு ஏக்கருக்கு 60 பவுண்டு தழைச்சத்தும் (நைட்ரஜன்) 40 பவுண்டு மணிச்சத்தும் (பாஸ்பாரிக் அமிலம்) போடுவதால் பருத்தியின் விளைச்சல் அதிகரிக்கிறது என்பது ஆடுதுறை, மணப்பாறை ஆகிய இடங்களில் நடந்த சோதனைகளின்மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆடுதுறையில் வரிசைகளுக்கிடையில் 18 அங்குல இடைவெளியும் பயிர்களுக்கிடையில் ஒன்பது அங்குல இடைவெளியும், மணப்பாறையில் வரிசைகளுக்கிடையில் 18 அங்குல இடைவெளியும், பயிர்களுக்கிடையில் ஆறு அங்குல இடைவெளியும் விடப்பட்டன. இரண்டு ஊர்களிலும் குழிக்கு ஒரு செடியை மட்டும் வளரவிடுதல் போதுமானதாக இருந்தன.

பருத்தியில் கருங்கிளை நோய்.

ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டு (Streptomycin sulphate 100 ppm) தெளிப்பதால் பருத்தி கருங்கிளை நோயைத் தடுக்கலாம். இதனால் மருந்தடிக்கப்படாத பருத்திப் பயிரைக் காட்டிலும் மருந்தடித்த பருத்திப் பயிரிலிருந்து 100 சதவீதம் அதிக விளைச்சல் கிடைக்கிறது.

நெல்.

ஏ.டி.டீ. 28 ஒரு புதுவகை நெல்.

ஏ. டி. டீ. 3 (குறுவை) என்ற நெல்லையும், சி· ஹெச். 42 என்று சொல்லக்கூடிய சீன வகையையும் சேர்த்து ஏ.டி.டீ. 28 என்ற நெல் உண்டாக்கப்பட்டது. விதைத்த காலத்திலிருந்து அறுவடை காலம் வரை இதனுடைய வயது 102 நாட்கள். இது ஏ.டி.டீ. 3-ஐ விட அதிக மகசூல் கொடுக்கக்கூடியது. பயிர் சாயாது தாள்களும் உறுதியானவை. ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் ஏக்கருக்கு 1,953 கிலோ தானியம் மகசூல் கொடுத்தது. இது ஏ.டி.டீ. 3-ஐவிட 34·3 சதவீதம் அதிகமாகும். விவசாயிகளுடைய நிலங்களில் ஏக்கருக்கு 1,598 கிலோ தானியம், அதாவது18.6 சதவீதம் ஏ.டி.டீ. 3 நெல்லைவிட அதிகம் மகசூல் கொடுத்திருக்கிறது. அரைத்து சுத்தம் செய்யப்பட்ட பிறகு நிறுவை அளவில் 72.2 சதவீதம் புழுங்கலரிசி கிடைத்தது. ஏ.டி.டீ. 28 நெல் ரகம் ஏ.டி.டீ. 3 நெல் ரகத்தைவிட ஒருவார காலம் வயது அதிகமாக இருந்த போதிலும் தஞ்சாவூர் ஜில்லாவில் மாயூரம், நாகப்பட்டினம் முதலிய கோட்டங்களடங்கிய குறுவைச் சாகுபடி செய்யப்படும் படுகை நிலங்களுக்கு இதனுடைய பயிர் சாயாத குணத்திற்காக இந்த நெல் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.

பயறு வகைகள்.

காவேரி டெல்டா பிரதேசத்திற்கு ஏற்ற உளுந்து வகை.

காவேரி டெல்டா பிரதேசங்களில் உள்ள நெல் தரிசு நிலங்களில் சாகுபடி செய்வதற்காக ஏ.டி.டீ. 1. என்ற உளுந்துவகை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆடுதுறையில் சேகரிக்கப்பட்ட ஒரு மாதிரியில் (Sample) கிடைத்த விளைவு இந்த ஏ. டி. டீ. 1. இது விதைத்து 90 நாட்களில் அறுவடைக்கு வருகிறது. மேலும் இது விவசாயிகளின் உளுந்தைவிட 11 சதவீதம் அதிகமகசூல் கொடுக்கிறது. ஏக்கருக்கு கிடைக்கும் சராசரி மகசூல் 375 பவுண்டு. இந்த உளுந்தில் 26.34 சதவீதம் புரோட்டின் இருக்கிறது. இது காவேரி டெல்டா பிரதேசத்தில் உள்ள நெல் தரிசு நிலங்களுக்கு மிகவும் ஏற்றது.

துவரைக்கு இரசாயன உரம்.

துவரை ஒரு மானாவாரிப் பயிராகையால் இதற்கு இரசாயன உரமிடுதல் பழக்கத்தில் இல்லை. ஆனால் எஸ்.ஏ. 1 துவரையில் நடத்தப்பட்ட சோதனையில் 20 பவுண்டு மணிச்சத்தும் 2 டன் கம்போஸ்ட்டும் போடுவதால் துவரையின் மகசூல் அதிகரிக்கிறதெனத் தெரியவருகிறது.

திராட்சை.

திராட்சைகளைக் கட்டியனுப்ப (Pack) ஒரு புதுமுறை.

மரப்பெட்டிகளில் காகிதத் துண்டுகளுக்கிடையில் திராட்சைக் கொத்துக்களை வைத்து அனுப்புதல், நெடுந் தொலைவில் உள்ள இடங்களுக்கு திராட்சைப் பழங்களை அனுப்ப ஒரு சிறந்த முறையாகும்.

நூற்புழுவியல் (Nematology).

புகையிலை நாற்றுக்களில் நூற்புழு (Nematodes).

தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்யத்தில் நடத்தப்பட்ட சோதனையின் முடிவு விதைப்பதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 25 காலன் வீதம் நிலத்திற்கு புகை போடுதல் நூற்புழுத் தாக்குதலில்லாத சுத்தமான புகையிலை நாற்றுக்களை வளர்க்க உதவுகிறது.

இலைகளின் அடிபாகத்திலிருந்து சத்தை உறுஞ்சி பூச்சிகள் பிழைக்கின்றன. 8 அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறை 'காமெக்ஸேன்' டி.025 ஐத் தூவியாகிலும் அல்லது 'காமெக்ஸேன்' டபிள்யு. டி. பி. யை தெளித்தாகிலும் மிளகாய்ச் செடிகள் நல்ல முறையிலும் ஆரோக்கியத்துடனும் வளர வழி செய்யவும்.

மேற்கொண்டு விவரங்களை உங்களுக்கு அருகாமையில் உள்ள ஐ. ஸி. ஐ. காரியாலயத்தில் விசாரித்துப் பெற்றுக் கொள்ளவும்.

I. C. I. (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா, பம்பாய், சென்னை, புது டில்லி.

தொழு உரமே தொழு உரம்

[எஸ். வரதராஜன், ராணிபெருமாள், கோவை ஆராய்ச்சிக்கூடம்.]

இயற்கை நமக்கு அளித்த செல்வம். தொழு உரம் மாடு, எருமை, கன்று இவற்றின் மூத்திரம், வீணாகிய பொருட்கள் முக்கியமாக வைக்கோல் இவை சேர்ந்து தொழுவுரமாகிறது. ஒரு வருடத்தில் சராசரியாக ஒரு மாடு தன் எடையைப் போல் 4 அல்லது 5 மடங்கு எடையுள்ள கழிவுப்பொருளை நமக்கு உரமாக அளிக்கிறது.

இந்த எளிதில் கிடைக்கக்கூடிய உரத்தில் பயிர்களுக்கு வேண்டிய எல்லா சத்துக்களும் உள்ளன. காய்ந்த மக்கிய தொழுவுரத்திலுள்ள உணவுச்சத்தை உடனே பயிர்கள் எடுத்துக்கொள்கின்றன. இவ்வுரம் பயிர்களுக்கு உணவாவது மட்டும் அன்றி, நுண்உயிர்களுக்கும் உணவாகிறது. நுண் உயிர்களின் தொகையை அதிகரிக்கச் செய்கிறது. மற்றும் பயிர் வளர்ச்சிக்கு வேண்டிய பல பொருட்களை அதாவது இண்டால், பியூட்ரிக் அமிலம் போன்றவைகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது.

தொழு உரத்தில் என்னென்ன சத்துகள் உண்டு ?

	நீர்.	தழைச் சத்து.	மணிச் சத்து.	சாம்பல் சத்து.
மாட்டின் சாணம்	80	0.34	1.7	0.15
மூத்திரம்	90	0.80	சிறிய அளவில்	1.40
காயாத புது தொழுவுரத்தில்	85	0.53	0.16	0.36

இதிலிருந்து தெளிவாக தெரிவது, தொழுவுரத்தின் தரத்தை உயர்த்துவது மாட்டின் மூத்திரமே. இதில் அதிக அளவில் தழை, சாம்பல் சத்துக்களும், குறைந்த அளவில் மணிச்சத்தும் உள்ளது. வைக்கோல் அல்லது மண், தொழுவத்தில் இருந்தால் இவைகள் மாட்டின் மூத்திரத்தை உறிஞ்சிக் கொள்ளும், சத்துக்கள் வெளியேருது. பின் இவைகளை தொழுவுரத்துடன் கலந்து கொள்ளலாம். தொழுவுரத்தின் தரம் பாதிக்கப்படாமல் இருக்க, நல்ல இடத்தில் சேகரித்து வைக்கவேண்டும். மழை நீர் படும்படி வைத்தால், அவ்வுரத்திலுள்ள தழை, மணி, சாம்பல் சத்துகள் கரைந்து வெளியேறிவிடும். மற்றும் வெயில்படும்படியும் வைக்கக் கூடாது. இதனுல் அதிக உஷ்ணத்தால் தழைச்சத்து ஆவியாகி விடும். ஆதலால் மாட்டின் மூத்திரத்தை தகுந்த முறையில் பாதுகாக்க வேண்டும்.

தொழுவுரத்தின் தரம் எதை பொருத்தது

1. **உணவைப் பொருத்தது.**—உதாரணமாக மாடுகளுக்கு புரதச்சத்து நிறைய உள்ள தீவனத்தைக் கொடுப்பதால், தழைச்சத்து தொழுவுரத்தில் அதிகரிக்கிறது.

2. **வயதைப் பொருத்தது.**—வயதிற்கு தகுந்தபடி, உணவு செரிக்கப்படுகிறது. வயது முதிர்ந்த மாடு எல்லா தழைச்சத்தையும் செறிக்க செய்ய முடியாமல், கழிவுப் பொருளாக வெளியேற்றி விடுகிறது. ஆனுல் வளரும் மாடுகளோ வளர்ச்சிக்கு தழைச்சத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது. ஆதலால் உரத்தில் தழைச்சத்து குறைந்து காணப்படும்.

3. **வேலை செய்யும் விதத்தைப் பொருத்தது அல்லது மாடுகள் எந்த தன்மை உடையனவோ அதைப் பொருத்தது.**—அதாவது ஈன்ற பசுக்களும், கறவைப் பசுக்களும் தரம் குறைந்த தொழுவுரத்தை அளிக்கின்றன.

ஒரு பசு உட்கொள்ளும் உணவிலிருந்து 40–லிருந்து 50 சதவிகிதம் வரை கரிமப்பொருளாகவும், தழைச் சத்தாகவும், 60–லிருந்து 80 சதவிகிதம் வரை மணிச் சத்தாகவும், சாம்பல் சத்தாகவும் நமக்கு தொழு உரமாக கிடைக்கிறது.

வைக்கோல் போன்ற கழிவுப் பொருட்களை மாடுகள் மிதிக்க, மிதிக்க அவைகளின் சாணம், மூத்திரம் இவை எல்லாம் சேர்ந்து ஒரு கெட்டியான கூட்டுக் கலவையாகிறது. மற்ற மாற்றங்கள் நுண் அணுக்கள் மூலமாக நடக்கின்றன.

நுண் அணுக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று காற்று உள்ள இடங்களில் வசிப்பவை. மற்றொன்று காற்றுபுக முடியா இடங்களில் வசிப்பவை. தொழுவுரத்துடன் சில நுண் அணுக்கள் காற்றிலிருந்து சேர்ந்து கொள்கின்றன. வேறு சில உணவு பாதையிலிருந்து சாணத்துடன் வெளிவந்து சேர்ந்து கொள்கின்றன. இந்நுண் அணுக்கள் ஆயிரக்கணக்கில் தொழுவுரத்தில் பெருக்க மடைகின்றன. சில நுண் அணுக்கள் தொழுவுரத்திலுள்ள செல்லுலோஸ் மற்றும் கரி கலந்த கூட்டு பொருள்களு

டனும், சில நுண் அணுக்கள் தழைச்சத்து உள்ள பொருள்களுடனும் கலந்து வேலை செய்து தாவரங்களுக்குச் சுலபமாக கிடைக்கக்கூடிய தாவரச்சத்துகளை உற்பத்தி செய்கிறது.

நன்கு சிதைந்த மக்கிய உரமே பயிர்களால் விரைவில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இச்சிதையும் தன்மையும், மக்கும் தன்மையும், பின் வருவனவற்றைப் பொறுத்தது :—

1. **உஷ்ணநிலை.**—அதிக உஷ்ணம், தொழுவுரத்தில் அதிக சிதைவை உண்டாக்கும்.

2. **குவியலாக கூட்டி வைக்கும் முறை.**—உதாரணமாக குவியலாக கூட்டி வைக்கும்போது காற்றேபுக முடியாமலோ அல்லது அதிக காற்று புகும்படியோ வைக்கக்கூடாது. அப்போது நுண் அணுக்களின் தொகை வேறுபடும். குவியலாக உரத்தை கூட்டி வைக்கும்போது சீராக கூட்டி வைக்கவேண்டும்.

3. **ஈரத்தன்மை.**—தொழுவுரத்தில் அதிக ஈரமிருந்தால் அவ்வதிக ஈரம் உரம் சரிவர மக்க விடாமல் தடுத்துவிடும். இதனால் தரமும் குறைந்துவிடும். ஆகவே, பதமான ஈரமே கொடுக்க வேண்டும்.

4. **அதிலுள்ள பொருட்களைப் பொருத்தது.**—உதாரணமாக கரையக்கூடிய தழைச்சத்து அதிகமாக இருந்தால் (பசுந்தழைகள்) விரைவில் உரம் சிதைந்து நன்கு மக்கிவிடும்.

புது தொழுவுரத்தைவிட நன்கு மக்கிய உரமே சிறந்தது. மக்கிய உரத்தில புதுஉரத்தைவிட சத்துகள் அதிக அளவில் உள்ளது. தழைச்சத்து எளிதில் பயிர்களுக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளது. மணிச்சத்து விரைவில் கரையும் தன்மையுடையதாக உள்ளது. மழையாலும் வெயிலாலும் பாதிக்கப்படாமல் சத்துக்கள் வெளியேறாமல் இருந்தால் சத்துக்களின் அளவு மக்கிய உரத்தில் பாதிக்கப்படாமல் அப்படியே இருக்கும்.

இம்மக்கிய உரத்தையே நாம் மண்ணிலிட வேண்டும். உரத்தை மண்ணிலிடும்போது உரத்திலுள்ள தழைச்சத்து அம்மோனிய நிலையிலிருந்து நைட்டிரேட்டாக மாற்றப்படுகிறது. இம்மாற்றம் "நைட்டிரசோமானஸ்" "நைட்டிரோபாக்டர்" போன்ற நுண் அணுக்களால் ஏற்படுகிறது. இம்மாற்றம் ஏற்பட அமோனியம் உப்புகள் வேண்டும். இந்த இருவகை நுண் அணுக்களும் தேவை. உஷ்ணநிலை சீராகவும், ஈரத்தன்மை பக்குவமாக, தகுந்த மாதிரியும் இருத்தல் அவசியம். இவைகளின் உதவியால் தழைச்சத்து நைட்டிரேட்டாக மாற்றப்படுகிறது. நைட்டிரேட் சத்துக்களை பயிர்கள் உடனே எடுத்துக் கொள்கின்றன.

எளிதில் கிடைக்கக்கூடியதும், தரத்தில் வலியதுமான இந்த தொழு உரத்தை உபயோகித்து, அதிக விளைவை அடைவது திண்ணம். இத்தொழுவுரத்தின் சிறப்பை நன்கு உணர்ந்து, யாவரும் பயனடைய வேண்டும்.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐயா,

1. எனக்கு தென்னை சாகுபடி நீண்ட காலக் கடனாக ....ஏக்கரில் புதிய தென்னந் தோப்பு ஏற்படுத்துவதற்கு ரூ................. வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னைத் தோப்பு ஏற்படுத்தப் போகும் நிலம் பற்றிய விவரங்களைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

2. நான் கடனை, கடன் வாங்கியதிலிருந்து பதினொரும் ஆண்டுத் தொடங்கி ஆண்டுத் தவணைகள் ஐந்தில் திருப்பிச் செலுத்தி விடுகிறேன்.

3. நான் இக்கடன் எந்தக் காரியத்துக்கு வாங்குகிறேனோ அதே காரியத்திற்காகச் செலவிடுவேன். இதில் உண்டான அரசாங்க சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுகிறேன். கடனில் ஒரு பகுதியைத் தென்னங்கன்றாக வாங்கிக் கொள்ளச் சம்மதம்.

1. விண்ணப்பதார் பெயர்:
   (தனித்தனி எழுத்துக்களில்)
2. கிராமத்தின் பெயர்:
3. நிலத்தின் ரெஜிஸ்டர் எண்:
4. கிஸ்தி தொகை:
5. கடன் வேண்டும் தொகை:
6. கடன் என்ன காரியத்துக்காக:
7. நிலம் பற்றிய விவரங்கள்;

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு நற்செய்தி !

பூமியில் ஜலதாரை பார்க்கும் விவரம்.

பூமியின் மேல் பரப்பில் ஆறு ஓடுவது போல பூமியின்கீழ் பாகத்திலும் பலவிதமான ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகள் ஓடும் திசையைப் பார்த்து கிணறுகள் வெட்டுவதற்காக அடிப்படை செய்தால் வற்றாத ஊற்றுள்ள கிணறை தோண்டி நல்ல விவசாயம் செய்ய ஏதுவாகும்.

பழைய கிணற்றில் தண்ணீர் கிடைக்கா விட்டால் அதன் கீழ்ப் பக்கத்தில் ஜலதாரை ஓடுகிறதா என்பதை பார்த்து சொல்ல முடியும். இதுபோலும் இதுவரை அநேக கிணறுகள், புதியதாகவும் பழைய கிணறுகள் சோதனைப் பார்த்தும் தோண்டி நல்ல நீர் ஊற்று வர வெற்றியடைந்துள்ளேன்.

பழைய கிணற்றினுடைய நான்கு பக்கங்களிலும் பாறையாக இருநதால் அதற்கும் கீழே ஜலதாரை ஓடும் விஷயம் கண்டு பிடித்து சொல்லப்படும்.

போர் போடுவதாய் இருந்தால் அதிக ஆழம் இருக்காமல் மேல் ஊற்று கண்டுபிடித்து சொல்ல முடியும்.

எவ்வளவு மேடான பகுதியாக இருப்பினும் பூமிக்கு மேற் பாகத்திலேயே ஜலதாரை ஓடுகிறதா என்று கண்டுபிடித்துச் சொல்ல இயலும்.

மலைப்பாங்கான இடத்தில் கல் மலை மீதும் மண் மலை மீதும் ஊற்றுள்ள பாகத்தைக் கண்டுபிடித்து சொல்ல இயலும்.

எனவே, நல்ல நீர் ஊற்றுள்ள கிணறுகள் தோண்ட வேண்டும் என்று விரும்பும் விவசாயிகளும், பெருங்குடி மக்களும் தங்கள் விருப்பத்தை கீழ்க்கண்ட என்னுடைய விலாசத்திற்கு எழுதி சிறந்த பயனை பெறுவீர்கள் என நம்புகிறேன்.

முகவுரை :— **அ· ராமகிருஷ்ண பண்டிதன்,**
கடைவீதி,
வேட்டவலம் (போஸ்டு)
திருவண்ணாமலை வட்டம்,
வடஆற்காடு மாவட்டம்.

விதை தெரிந்தனர் விந்தை கண்டனர்

நெல் ரகத்தை மாற்றிப் பயிரிட்ட கிருஷ்ணகிரி விவசாயிகள் ஓர் அதிசயத்தையே கண்டனர். ஆம். மகசூலில் அவர்களுக்கு 30 சதவிகித அதிகரிப்பு. அவர்கள் புதிதாகப் போட்ட நெல் பி. வி. ஆர். 1. ஆம்

களர் நிலங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் பி. வி. ஆர். 1.

தென்பெண்ணை ஆற்றுநீர் பாயும் பகுதியில், கிருஷ்ணகிரி கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத்திற்கு அருகில், பழமையின் சின்னமாய் எளிமையின் வடிவமாய் அமைந்துள்ளன பல குக்கிராமங்கள்—பெரியமுத்தூர், சின்னமுத்தூர், கண்டேகுப்பம் முதலியன. அக்கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள், பழமையில் ஊறியவர்கள். ஐந்து செண்ட், பத்து செண்ட் என்ற சிறு சிறு துண்டு நிலங்களை உடைய அவர்கள் வறிய வாழ்க்கை நிலையைப் பெற்றிருப்பதில் வியப்பென்ன ? அதிலும், அவர்களது நிலங்கள், அளவில் மட்டுமின்றி தரத்திலும் தாழ்ந்தவை—பெரும்பாலும் களர் நிலங்கள் ! பின், மகசூலைப் பற்றி கேட்க வேண்டுமா ?

களர் நிலம் என்பதால், கரம்பாகப் போட்டு விடவில்லை ; போட முடியாது—அந்த நிலத்திலும் ஏதாவது பயிரிட்டால் தான் ஓரளவாகிலும் ‘ வாழ்க்கை வண்டி ’ ஓடும். ஆக, கடினமாகத்தான் உழைத்தார்கள்—பலன்தான் போதுமானதாக இல்லை. ஆனால் அதற்குமேல் ஒன்றும் ஆகாது என்பதாக ஒரு ஆறுதல் நிலையோடு நின்றனர். தங்கள் களர் நிலத்திற்கு ஏற்றதென அவர்கள் கண்டதெல்லாம் ஒருவகை கருப்பு–சிவப்பு நெல் ரகந்தான். அந்த நெல் வகையைத் தவிர வேறெதுவும் அதிகப் பலன் தராது என்பது அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை. அவர்களது ‘ அனுபவத்’தில் கண்ட ‘ உண்மை ’ அது.

இந்த நிலையில், களர் நிலங்களுக்கு மிகவும் தகுதியான ‘பி.வி.ஆர்–1’ என்ற நெல் ரகத்தை, அவர்கள் ஏற்கச் செய்வது எங்ஙனம் ? புதிய நெல் வகையைப் பயிரிடுவதால், உள்ள மகசூலும் கிடைக்காமற் போகுமோ என்ற ஐயமும், அச்சமும் அவர்களை ஆட்கொண்டிருந்தன. எனினும், பயிற்சி நிலைய ஆசிரியர்களும், பயிற்சிக்காக வந்திருந்த கிராமநல ஊழியர்களும் மன உறுதியோடு முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் சிறுசிறு குழுக்களாகச் சென்று, விவசாயிகளைச் சந்தித்து, உரையாடி, புது நெல் ரகத்தைக் காண்பித்து, அதன் சிறப்பை எடுத்துரைத்தனர். ஐயம், அறவே அகலவில்லையெனினும், பயிரிட்டுத்தான் பார்ப்போமே எனத் துணிந்தனர் குப்புச்சி, சோட்டா சாஹிப், பச்சியப்பன், சுருட்டை, பெருமாள் கவுண்டர் போன்ற சிலர்.

இவர்கள் பெரிய விவசாயிகள் அல்லர் ; சிறுசிறு துண்டு நிலங்கள் கொண்ட எளியவர்கள். அவர்களுக்கு, விதை வாங்கப் போதிய பணவசதி இல்லை. அதோடு, குறைந்த அளவே விதை வாங்க வேண்டி இருந்த அவர்கள் அதற்காக விவசாய பண்டகசாலைக்குச் செல்ல ஆர்வம் காட்டவில்லை. ஒவ்வொருவருக்கும் போதுமான சிறு அளவில், விதையைப் பண்டகசாலையினர் தருவார்களா என்று ஐயம் வேறு.

இப்பிரச்னைக்குத் தீர்வு காண, பயிற்சி நிலைய ஊழியர்கள் கூடி விவாதித்து, ஒரு முடிவெடுத்தனர். அதன்படி, விவசாய பண்டகசாலையிலிருந்து ‘பி.வி.ஆர்–1’ நெல்லை, நிலைய ஊழியர்கள் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று, பண்டமாற்று முறையில் விநியோகம் செய்தனர். அதாவது கருப்பு–சிவப்பு நெல் 5 பங்கிற்கு, ‘பி.வி.ஆர்–1’ நெல் 4 பங்கு என்ற விகிதத்தில், பழைய நெல் ரகத்திற்குப் பதிலாகப் புதிய ரக விதை தரப்பட்டது.

இவ்வாறு, 1,125 கிலோ ‘பி.வி.ஆர்–1’ நெல், பல விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுப் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலைய ஊழியர்களும் பயிற்சியாளர்களும், இப்புதிய ரக நெல் பயிரிடப்பட்டுள்ள நிலங்களுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டு, விவசாயிகளையும் சந்தித்து ஆவன செய்து வந்தனர். இளம் பயிரில் இலைப் பேன் பூச்சி தீவிரமாகக் காணப்பட்டபோது, அதனால் எற்படும் சேதத்தைத் தடுக்கும் வழிமுறைகள் எடுத்துக் கூறப்பட்டன. பல இடங்களில் 'மாதிரி'க்காக பூச்சி தடுப்பு மருந்துகளும் தெளித்து காண்பித்தனர்.

இவ்வாறு இடர்ப்பாடுகள் சில தோன்றினாலும், பி வி.ஆர். 1 நெல் செழித்து வளர்ந்தது. களர் நிலத்திலே புது நெல் இவ்வளவு அருமையாக வளர்ந்திருந்தது கண்டு கிராமவாசிகள் ஆச்சரியமுற்றனர். புதுரக நெல் பற்றி ஆவலுடன் விசாரித்தனர்.

எனவே, விவசாயிகளின் நன்மைக்காக, ஆங்காங்கே வயல்களிலும், மக்கள் சந்திக்கும் முக்கிய இடங்களிலும் புதுரக நெல்லை பற்றிய விவரங்கள் செய்திப் பலகைகளிலும் விளம்பரப் பலகைகளிலும் மக்கள் மனதைக் கவரும்படியாக எழுதி வைக்கப்பட்டன. விளம்பரம் மட்டுமல்ல; அருகில் உள்ள பி.வி.ஆர். 1 நெல்லின் நீண்ட குலை குலையான மணிப்பிடிப்புள்ள அழகிய கதிர்களும் கண்டோர் மனதைக் கவர்ந்தன.

பயிற்சி நிலைய ஆசிரியர்கள், அறுவடையின்போது உடன் இருந்து மகசூலைக் கணக்கிட்டனர். பி.வி.ஆர். 1 நெல் ஐந்து விவசாயிகளுக்குக் கொடுத்துள்ள கணிசமான மகசூல் விவரம் வருமாறு :—

	விவசாயியின் பெயர்.	பி.வி.ஆர். 1 நெல் ஏக்கருக்கு மகசூல்.
	(1)	(2)
1.	பாபா சாஹிப்	4,335 ராத்தல்
2.	சுருட்டை பெருமாள் கவுண்டர்	4,057 ,,
3.	சோட்டா சாஹிப்	3,797 ,,
4.	குப்புச்சி	3,762 ,,
5.	பச்சியப்பன்	3,470 ,,

இந்த மகசூல், பழைய கருப்பு—சிவப்பு நெல்லில் கிடைத்ததைவிட 30 சதவீதம் அதிகம் ஆகும். இது குறித்து விவசாயிகள் தங்களது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இந்த நெல்லுக்கு இப்பொழுது இந்தப் பகுதியில் அமோக வரவேற்பு. பச்சியப்பன், குப்புச்சி, சோட்டா சாஹிப் முதலியவர்களிடம் இந்த பி.வி.ஆர். 1 நெல்லைப் பண்டமாற்று முறையில் பெற, பக்கத்து விவசாயிகள் முந்துகிறார்கள். 'பி.வி.ஆர். 1' நெல், களர் நிலங்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்பதை இப்பகுதி மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

தகவல் : பொதுஜனத் தொடர்பு அதிகாரி.

போன் :
24558, 34251 & 63746

தந்தி :
'VENPALCO'

கஜலக்ஷ்மி கலப்பு உரங்கள்

GOVERNMENT ORDER NO. 3353

மிகச் சிறந்த N. P. K. 'கஜலக்ஷ்மி மார்க்' கலப்பு உரங்களை எல்லாவிதமான பயிர்கள், காய்கறி வகைகள், புஷ்பச் செடிகள், தோட்டப்பயிர்கள் முதலியவைகளுக்கு உபயோகித்து அதிக லாபம் அடையுங்கள்.

5 கிலோ, 2 கிலோ பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்.

மிகவும் உபயோககரமான சகலவித நவீன விவசாயக் கருவிகளும் கிடைக்கும்.

V. வேணுகோபால் பிள்ளை & Co. & இராமன்ஸ் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்

2/27, பிராட்வே :: சென்னை-1.

கிளைகள் :

திருவள்ளூர், பொன்னேரி, காரனோடை & விழுப்புரம்

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.



வானொலிச் செய்திகள்

விவசாயச் செய்திகளை ரேடியோ மூலம் தீவிரமாக ஒலிப்பரப்ப தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் என்ற திட்டம் திருச்சி வானொலி நிலையத்தில் 7—6—66 முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. துவக்க விழாவிற்கு மத்திய உணவு மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அனுப்பிய செய்திை யவாசகர்கள் படித்துப் பயனடைவார்களாக.

“ நடப்பு ஆண்டில் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியின் காரணமாக, விவசாயத் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்கின்ற கருத்து பரவலாக ஏற்பட்டிருக்கின்றது. இதையொட்டி சர்க்கார் புதியதொரு விவசாய அபிவிருத்தித் திட்டத்தை அமுல் நடத்த முன்வந்திருப்பதை மக்கள் அறிவார்கள். இந்த திட்டத்தின் கீழ் அதிக உற்பத்தி கொடுக்கக்கூடிய புதிய ரக விதைகளை உபயோகப்படுத்தி அதற்கு வேண்டிய ரசாயன உரம், பயிர் பாதுகாப்புக்கு வேண்டிய மருந்துகள், அதற்கு ஒப்ப வேண்டிய அளவு நீர்ப் பாசன வசதி இவைகளையெல்லாம் உபயோகப்படுத்துவதற்கு குடியானவர்களுக்கு போதிய அளவு கடன்கொடுத்து உதவுவது. இந்த அடிப்படையில் இந்த திட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த திட்டத்தின் மூலம் அடுத்த ஐந்தாண்டுக்குள்ளாக சுமார் $3\frac{1}{2}$ கோடி ஏக்கர் நிலத்தில் இந்த புதிய ரக விதைகளை உயயோகப்படுத்தி சாகுபடி செய்வது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு சுமார் 50 லட்சம் அல்லது 60 லட்சம் ஏகரா இந்த புதிய முறையில் சாகுபடி செய்வதாக உத்தேசம். இதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது. ஆனால் இந்ததிட்டம் வெற்றிபெறவேண்டுமென்று சொன்னால், குடியானவர்கள் இந்த திட்டத்தில் பங்குகொண்டு வெற்றிகரமாக அமுல் நடத்தக்கூடிய சக்தியை அவர்கள் பெறவேண்டும். பொருள்களை பெறுவது ஒரு புறமிருக்க விதையை உபயோகப்படுத்துவதற்கு, உரத்தை உபயோகப்படுத்துவதற்கு, பூச்சி மருந்துகளை உபயோகப்படுத்துவதற்கு இதற்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் குடியானவர்கள் காலா காலத்தில் தெரிந்து அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம். இதை குடியானவர்களுக்கு எவ்வாறு எடுத்துச்சொல்வது. ஒவ்வொரு குடியானவனும் எப்படி இந்த விஷயத்தை அறிந்து கொள்வது என்பதைப் பற்றி ஆலோசனை செய்து, இந்த விஷயத்தை குடியானவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக ரேடியோவை பயன்படுத்தவேண்டும் என்று சர்க்கார் முடிவு செய்திருக்கின்றது. இந்த அடிப்படையிலே ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு தனி ஒலிபரப்பு நிலையம் ஏற்படுத்தி அந்த ஒலிபரப்பு நிலையத்திலிருந்து அந்த பிராந்தியத்திற்கு ஏற்ற செய்திகளை, விஷயங்களை குடியானவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டுமென்பது ஏற்பாடு. இப்பொழுது நம்முடைய நாட்டிலே பத்து ஒலிபரப்பு நிலையங்களுடன் இந்த திட்டம், செய்தி ஒலிபரப்பு திட்டம் ஆரம்பமாகின்றது. நான்காவது ஐந்தாண்டு திட்ட முடிவிற்குள்ளாக 60 பிராந்திய ஒலிபரப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலமாக குடியானவர்களுக்கு பருவகால நிலை, எப்பொழுது விதைப்பது எப்பொழுது உரமிடுவது, எப்பொழுது தண்ணீர் பாய்ச்சுவது என்ற அந்தந்த பயிருக்கு ஏற்ற, பருவகாலத்திற்கு ஏற்ப விஷயங்களை எடுத்துச் சொல்லி அவர்கள் இந்த சாகுபடித் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்கிற அடிப்படையில் இந்த ஒலிப்பரப்புத் திட்டம் இன்றைக்கு ஜூன் 7-ந்தேதி அன்று ஆரம்பமாக இருக்கின்றது. இந்த ஒலிப்பரப்பின் மூலமாக நம் குடியானவர்கள் விஷயங்களை அறிந்து, திட்டத்தைப் புரிந்துகொண்டு, காலாகாலத்தில் சாகுபடி திட்டங்களில் ஈடுபட்டு அதிக விளைச்சலை எடுத்து, அதன் மூலம் அவர்கள் பயன்பெறுவதுடன், நாட்டினுடைய உணவு பிரச்னையும் தீர்ப்பதற்கு அவர்கள் பங்கு கொள்வார்கள். இந்த ஒலிப்பரப்புத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்று நான் என்னுடைய ஆசியை தெரிவித்துக்கொள்வதுடன், இதை வெற்றிபெறச் செய்வது குடியானவர்களுடைய கையில் இருக்கிறது. இந்த ஒலிப்பரப்பை தினமும் அவர்கள் கேட்டு, அந்த ஒலிபரப்பின் மூலம் கிடைக்கக்கூடிய செய்திகளை பயன்படுத்தி இந்த புதிய விவசாயத் திட்டத்தை வெற்றி பெறச்செய்ய வேண்டுமென்று மக்கள் எல்லோரையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ”

தீவிர ஒலிபரப்புத் திட்டத்தை மாநில விவசாய அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். துவக்க விழா உரை கீழே தரப்படுகிறது.

"பாரத நாட்டின் இன்றைய உணவுப் பிரச்னை மிகவும் தீவிரமாக கவனிக்கப்பட்டு வருவதால் உணவு உற்பத்தியை பெருக்குவதில் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு விவசாயியும் தன்னல் எவ்வளவு முயற்சி எடுத்து உற்பத்தியைப் பெருக்க முடியுமோ, அந்த அளவுக்குச் செய்வது இந்த நாட்டிற்கு அவர்கள் செய்கின்ற பெருந்தொண்டாகும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மண்வளம் நன்கு இருக்க வேண்டும். அந்த மண்வளத்தின் தரத்தை உயர்த்தி தரப்படுத்தவேண்டுமானல், தொழுவுரம், கலவையுரம் இன்றியமையாதது என்பதை நாம் அறிவோம்.

மேலும், ரசாயன உரங்களை விவசாய அதிகாரிகள் தெரிவிக்கும் முறையில் பயிர்களுக்குப் போடுவதின் மூலமாக அதிகப் பலனைப் பெறுவோம்.

'வயிற்றுக்குச் சோறிடவேண்டும், இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்' என்னும் பாரதியார் பாட்டின் கருத்தை கேட்கும்போது அந்த உணவினை அடைய, உணவு கொடுப்போரும், உண்போரும் எவ்வாறு உணவு உற்பத்திக்கு உதவி செய்ய வேண்டுமென்று சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

விவசாயிகள் 'உழுவோம், உழைப்போம், உயர்வோம்' என்னும் சிறந்த கருத்தினை மனதில்கொண்டு சிறந்த வேளாண்மைப் பணி செய்துவருவதால், அவர்களை ஊக்குவித்து, உதவி செய்வதற்காக அகில இந்திய ரேடியோ வில் இந்தத் " தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் " ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ரேடியோ மிகவும் சக்திவாய்ந்த ஓர் அபூர்வ சாதனம். ஆண்டவனின் அபார சக்திக்கு ஓர் அறிகுறியாய் விளங்குவது ரேடியோ என்று ஒரு சமயம் நம் தேச பிதா மகாத்மாஜி அவர்கள் சொன்னர்கள். ஒரு சாதாரண பொழுதுபோக்கிற்கான கருவியாக மட்டும் ரேடியோ இல்லாது, மக்களைப் பல துறைகளிலும் முன்னேறச் செய்ய பல அரிய நிகழ்ச்சிகளை ரேடியோ ஒலிபரப்பி வருகிறது. எந்த ஒரு காரியத்தை விளம்பரம் செய்ய வேண்டுமென்றா லும், அது ரேடியோவினல் வெகு தீவிரமாகவும், துரிதமாகவும், செய்ய முடிகிறது. இந்த அடிப்படையிலேயே வெகு காலமாக நம் நாட்டைப் பீடித்துள்ள உணவுப் பற்றுக்குறையைப் போக்க, உணவு உற்பத்தியைப் பெருக்கி, நாட்டில் சுபிட்சம் வளருவதற்காக சகல விவசாய, ஆராய்ச்சி அனுபவ, நூதன முறைகளையும், விவசாயிகளுக்கு வழங்குவதற்கென்றே இன்று, ஆகாசவாணியின் 10 நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. இதில் நமது திருச்சி வானெலி நிலையமும் ஒன்றாகும். இந்தத் தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டத்தை முன்னிட்டு, விவசாயத் துறையில் நன்கு பயிற்சி பெற்றுள்ள சிலர் இந்த பத்து நிலையங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அரசாங்க விவசாய இலாகாக்களின் விஸ்தரிப்பு காரியங்களை இதற்குமுன் கவனித்து வந்தவர்களாதலால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவ்வப்போது அவசிய மான சகல விவரங்களையும், ரேடியோ மூலம் ஒலிபரப்பி வருகிறார்கள்.

நம் நாட்டில் பல பாகங்களிலும் தீவிர விவசாய திட்டம் அமுலில் இருந்து வருவது எல்லோரும் அறிந்ததே. நம் தமிழ் நாட்டில், தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற தீவிர சாகுபடித் திட்டம் எதிர்பார்த்த அளவு நல்ல பலனை அளித்துள்ளதால், மேலும் செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களி லும் தீவிர சாகுபடித் திட்டம் இப்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வட்டாரத்து மக்களுக்கு, விசேஷமாக பலன் அளிக்கும் வகையில் இப்புதிய ஒலிபரப்புத் திட்டம் செயலாற்றி வரும். இந்த ஒலிபரப்பில் நெல், ராகி, சோளம் முதலான பயிர்களின் சாகுபடி முறைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சகலவிதமான ஆராய்ச்சி அனுபவங்களும் ஒலிபரப்ப ஏற்பாடாகும்.

இந்த புதிய ஒலிபரப்புத் திட்டத்தில் பணியாற்றி வரும் அதிகாரிகள், ஆங்காங்கே உள்ள கிராம சேவக், விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி முதலியவர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டிருப் பார்கள். மேலும், தீவிர விவசாயத் திட்ட அதிகாரிகள், நிபுணர்கள், இவர்களோடும் தொடர்பு எற்படுத்திக்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் அனுபவங்களையும் ஒலிபரப்புவார்கள்.

இவ்வாறு விவசாயத் துறையில் மிகவும் முன்னேறியுள்ள அனுபவ விவசாயிகளின் கூட்டுறவும், இவர்களால் மிகவும் பயன்படுத்திக்கொள்ளப்படும். இவ்வாறு, பலதரப்பட்ட விவசாய அறிஞர்களும் ஒன்று சேர்ந்து விவாதித்து, அதன் மூலமாக, ஏற்படும் அனுபவங்களும், விளைவுகளும் விவசாய உற்பத்தியைப் பெருக்க மிகவும் உதவும் என்று நம்பப்படுகிறது.

இப்புதிய ஒலிபரப்புத் திட்டத்தில் பங்குகொள்ளும் அலுவலர்கள், பல கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள விவசாயிகளை சந்தித்து அவர்கள் குறைகளுக்கு மார்க்கம் தேடுவதோடு அத்தகைய விவசாயிகளை, நிலையத்தின் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவும் ஏற்பாடு செய்வார்கள்.

இதுபோன்ற விவசாயக் காரியங்களில் கவனம் செலுத்துவது போன்றே விவசாயத்திற்கு அடிப்படையான கால்நடை, குடிசைத் தொழில், பொது சுகாதாரம் போன்ற துறைகளிலும் இந்த ஒலிபரப்பு திட்டத்தின் மூலம் போதிய கவனம் செலுத்தப்படும். இதனுல் பொதுவாக நம் கிராம மக்கள் வாழ்வில், குறிப்பாக நம் விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்க்கையில் ஒரு புத்துணர்ச்சியும் பொருளாதார மேம்பாடும் உதயமாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வானெலி நிர்வாகஸ்தர்களின் இந்த நல்ல முயற்சியில் பொதுமக்கள் எல்லாரும் பங்குகொண்டு, ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திட்டம் பூரண வெற்றி அடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வணங்கி இந்தத் திட்டத்தைத் துவக்கி வைக்கிறேன்."

அன்புடையீர்!

இதுவரை வானெலி விவசாய அலுவலராகப் பணியாற்றிய திரு. து. கணபதி அவர்கள் இப்பணியைத் தொடர்ந்து இன்னும் சிறந்த முறையில் செயலாற்றுவதற்கென திருச்சி அகில இந்திய வானெலி நிலையத்திற்குச் சென்றிருக்கிருர்கள். அங்கு அவர் "பண்ணையும் வீடும்" என வழங்கும் பிரிவில் "விஸ்தரிப்பு அலுவலரா"கப் பதவியேற்றுள்ளார். இனி அவர் உங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும்.

"வானெலி விவசாய அலுவலராக நான் இப்போது பொறுப்பேற்றுள்ளேன். உங்களுடன் நெருங்கித் தொடர்பு கொண்டு விவசாய உற்பத்தியை தீவிரமாக அதிகரிக்க வானெலி ஒலிபரப்புகளை பெருமளவில் உபயோகிக்க கிடைத்திருக்கும் வாய்ப்பை என்னுடைய பெரிய பாக்கியமாகவே எண்ணுகிறேன்.

பருவமழை தவறியதால் நமது நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில், நமது பொறுப்பும் கடமையும் மிகவும் அதிகமாகும். இந்த வருஷமும் பருவமழை நம்மை ஏமாற்றிவிடுமோ என்ற கவலை நமக்கு இருந்து வருகிறது. ஆகவே இந்தச் சூழ் நிலையில் நாம் என்ன செய்யவேண்டும், என்ன செய்ய முடியும் என்பதை அறிந்துகொள்ள இப்போது நிகழ்ந்து வரும் விவசாயிகளுக்கான வானெலி ஒலிபரப்பு ஓர் புதிய திருப்பமாகும்.

இப்புதிய ஏற்பாட்டின்படி ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பேச்சு அல்லது விவாதம் நடைபெறும். பிரதி திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் சுமார் மூன்று நிமிடங்களுக்குப் பண்ணைச் செய்தியும் புதன் சனிக்கிழமைகளில் விஸ்தரிப்பு அலுவலர்களுக்கான குறிப்புகளும் ஒலிபரப்பப்படுகின்றன. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் வானெலி மன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனப் பரந்த நோக்கத்துடன் விவசாயத்தில் வெற்றிபெற்ற அன்பர்கள் தங்கள் அனுபவங்களை பிற விவசாயிகளுக்கும் எடுத்துச் சொல்லுவது ஓர் சிறப்பான அம்சமாகும்.

இப்பெரு முயற்சியின் பயனை முழுவதும் பெறவேண்டுமானுல் நீங்கள் தினமும் மாலை 7–30 முதல் 8 மணி வரை திருச்சி வானெலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகி, சென்னை A, திருநெல்வேலி நிலையங்களால் அஞ்சல் செய்யப்படும் இந்த நிகழ்ச்சிகளைத் தவறுமல் கேட்பது மிகமிக அவசியம். இந்த ஒலிபரப்புகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், இன்னும் சிறந்த முறையில் விவசாய பெருமக்களுக்கு இந்த வானெலி நிகழ்ச்சிகள் பயன் பெற என்ன செய்யலாம் என்பதைப் பற்றித் தங்கள் மேலான கருத்துக்களை எனக்கு நேர்முகமாக கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரியப்படுத்த உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்."

உங்கள் சேவையைப் பெரும்பேருகக் கருதும்,

ஜா. பே. ஜார்ஜ்,

வானெலி விவசாய அலுவலர்,

36–B, மௌண்ட் ரோடு,

சென்னை–2.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் நெல், ராகி, சோளம், கம்பு போன்ற சிறு தானியங்கள், பிரதான விதை உற்பத்தி செய்வதற்காக 200 விதைப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகள் உற்பத்தி செய்யும் விதைகளின் அளவு ஆண்டுக்கு சுமார்,

நெல்	..	2,400	டன்
புஞ்சைத் தானியங்கள்	..	108	டன்
உருளைக்கிழங்கு		343	டன்

தனியார் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயத் துறை வாங்கி விநியோகிக்கும் சிறு தானியங்கள் பிரதான விதை சுமார் 80 டன்.

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

கே: நான் விவசாயத்தைப் பற்றி விவசாயப் பயிற்சி பெற விரும்புகிறேன். இதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஆர். செல்வராஜ், சிதம்பரம்.

ப: ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகளுக்கு நவீன விவசாயப் பயிற்சி கொடுக்க விவசாயப் பள்ளிகள் ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகின்றன. நீங்கள் "மாவட்ட விவசாய அலுவலர், கடலூர்" என்ற முகவரிக்கு எழுதி அவருடன் தொடர்பு கொள்ளவும்.

கே: என்னுடைய சுமார் ஒரு எக்கர் நிலத்தில் இரண்டு மூன்று வருடமாக பயிர்களைக் கரையான் வெட்டி நஷ்டம் அடைகிறது. எந்த மருந்தை உபயோகித்தால் பலன் அடைந்து நிலம் நன்மையாகும்?

அ வெ. சரவணப் பிள்ளை, சித்திலிங்க மடம், தென்னாற்காடு மாவட்டம்.

ப: உங்களுடைய நிலத்திலுள்ள கரையானை கட்டுப்படுத்த 100 சதவீதம் ஹெப்டாக்ளோர், ஆல்டிரின், டயல்டிரின் ஆகிய மூன்று மருந்துகளில் ஏதாவது ஒன்றை எக்கருக்கு இரண்டு ராத்தல் வீதம் மண்ணில் கலக்கவும்.

கே: பூசா சவானி, வெண்டை போன்ற நல்ல காய்கறி விதைகளை நாங்கள் எங்கிருந்து பெறலாம் என்பதை தெரிவிக்கவும்?

என். முத்துசாமி, கீழவிடயல், திருச்சிறை.

ப: பூசா சவானி, வெண்டை போன்ற உயர்தர காய்கறி விதைகளை உங்களுடைய வட்டார விவசாயக் கிடங்கிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே: இரசாயன உரமிட்டு எவ்வளவு நேரத்தில் நெற்பயிர் கிரகித்துக்கொள்கிறது? எவ்வளவு நாள் அந்த நீரை வடியவிடக்கூடாது? மழை அதிகம் பெய்தால் அந்த உரம் எவ்விதம் விரயமேற்படுகிறது?

வி. பி. ஜவஹர், வெள்ளூர் 4, தென்னாற்காடு மாவட்டம்.

ப: இரசாயன உரமிட்டு சுமார் 12 வாரங்களில் பயிர்கள் உணவுச் சத்துக்களை கிரகித்துக்கொள்ளுகின்றன. இரசாயன உரம் இடும் முன் நெல் வயலில் சுமார் ஒரு அங்குலம் தண்ணீர் நிறுத்தி வைக்க வேண்டும். உரம் இட்டபின் அந்த வயலில் உள்ள நீரை வயலிலிருந்து வடிக்காமல் வயலிலேயே வற்றியபின் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இரசாயன உரம் இட்டபின் நெல் வயலிலிருந்து நிலைத்திற்கேற்ப 24 மணி முதல் 48 மணி வரை தண்ணீர் வடிக்கக்கூடாது. இரசாயன உரம் இட்ட உடன் மழை அதிகம் பெய்தால் வயலிலிருந்து தண்ணீர் வெளியே போகாமல் தடுத்து நிறுத்திவிட்டால் விரையம் ஏற்படாது. இல்லையேல் தண்ணீரில் கரைந்துள்ள பயிருக்கு வேண்டிய உணவு சத்துக்கள் தண்ணீருடன் வெளியேறிவிடும்.

கே: தாளடி நெற்பயிருக்கு இரண்டாம் நம்பர் கலப்புரம் எக்கருக்கு எவ்வளவு தேவை? போட்டு நட்டபின் மேலுரம் யூரியா எவ்வளவு போடலாம் அல்லது கலப்புரம் இடும் வழி யாது?

வி. பி. ஜவஹர், வெள்ளூர்.

ப: தாளடி நெற்பயிருக்கு எக்கருக்கு 100 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 85 கிலோ சூப்பரும், 24 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசும் இடலாம். தழை உரம் 5,000 ராத்தல் இட வேண்டும்.

இரசாயன உரத்தில் சூப்பர், மியூரியேட் ஆப் பொட்டாசு முழுவதையும், அம்மோனியம் சல்பேட்டில் பாதியையும் கடைசி உழவிலிட வேண்டும். பின் ஒரு மாதம் கழித்து மறுபாதி அம்மோனியம் சல்பேட்டை இட வேண்டும்.

இரண்டாம் நம்பர் கலப்பு உரமானல் 200 கிலோ கலப்புரத்தை அடி உரமாக இட்டால் போதும். மேலுரம் தேவைப்படாது.

கே: எனக்கு 500 தென்னம்பிள்ளைகள் வேண்டியுள்ளது ஐந்து வருடங்களில் பலனுக்கு வரக்கூடியதும் அதிக வருடங்கள் பலன் தரக்கூடியதுமான அதிக அளவு பலன் கொடுக்கும் தென்னம்பிள்ளைகள் எங்கு உள்ளது என்று தெரிவித்தால் நான் அவைகளை வரவழைத்து பயிர் செய்ய விரும்புகிறேன்.

ஆர். குலசேகர், S.P.R. மில்ஸ், கோவை.

ப: விவசாய இலாகாவில் நல்ல தரமான தென்னம் பிள்ளைகள் உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இவைகளை வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாகவே விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் அரசினர் அங்கீகாரம் பெற்ற தனிப்பட்டோர் நாற்றங்கால்களிலும் தென்னம்பிள்ளைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகின்றன. உங்களுடைய தேவைக்கு உங்களுடைய வட்டார விவசாய விஸ்தரிப்பு அதிகாரியை அணுகவும்.

கே: கலப்பு வீரியக் கம்பு ஹெச்.பி. 1, சி.எஸ்.எச். 1 வீரிய சோளம் இந்த இரண்டு வகை தானியங்களை எந்த மாதத்தில் பயிர் செய்ய வேண்டும்?

K. K. முத்து, குப்பாண்டம்பாளையம், அந்தியூர்.

ப: சி.எஸ்.எச். 1, வீரிய ஒட்டுச் சோளத்தை வருடம் முழுவதும் பயிர் செய்யலாமென்றாலும் இதற்கு கோடைப் பருவமே மிகச் சிறந்ததாகும். ஹெச்.பி. 1, வீரியக் கம்புக்கு எப்ரல் முதல் ஜூலை வரையான கோடைப் பருவமே பாசனப் பயிராக பயிர் செய்ய ஏற்றது.

கே: டி.கே.எம். 6 என்கிற நெல் வகையை தற்சமயம் வரும் நடவு பட்டத்திற்கு எந்த மாதத்தில், எந்த தேதிக்குள் நாற்று விடலாம்? எத்தனை நாட்களில் நாற்று எடுத்து நடவு செய்யலாம்? ஒரு ஏக்கருக்கு என்னென்ன வகையில் எவ்வளவு உரங்கள் போட வேண்டும்? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கிலோ மகசூல் கிடைக்கும்?

K.P. விஜயராகவன், கோழியாலம், செங்கை மாவட்டம்.

ப: டி.கே.எம். 6 நெல்லை எப்ரல்-மே மாதங்களிலும், டிசம்பர்-ஜனவரி மாதங்களிலும் நாற்றுவிட்டு நடலாம். நாற்றை 25 நாட்களில் எடுத்து நடலாம். ஏக்கருக்கு 4 முதல் 6 வண்டி தழை உரம் (5,000 ராத்தல்) அல்லது 10-15 வண்டி தொழு உரம் இட்டு சேறு கலக்கவும். நடவுக்கு முன் கடைசி உழவு சாலில் 42½ கிலோ சூப்பர் பாஸ்பேட், 12 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ், 35 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட் போட்டு நடவு செய்யவும். நடவுக்குப்பின் ஒரு மாதம் கழித்து 35 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் இடவும்.

ஒரு ஏக்கருக்கு சராசரி 1,350 கிலோ தானிய மகசூல் கிடைக்கும்.

கே: கம்பு, ராகியில் அதிக விளைச்சல் தரக்கூடியது என்ன ? அவை எங்கு கிடைக்கும் என்ற தகவல்களைக் கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

செ. ஆரோக்கியநதன், பூமனூர்.

ப: கோ. 3, எக்ஸ் 3, எச்.பி. 1, ஆகிய கம்பு, ராகியில் கோ. 1, கோ. 2. கோ. 7, கோ. 8, என்ற வகைகளும் நல்ல மகசூல் கொடுப்பன. இவைகளின் வயதும் மகசூலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பயிரின் வகை. (1)	வயது நாட்களில். (2)	ஏக்கருக்கு விளைச்சல் தானிய மகசூல். 3) ராத்தல்.
கம்பு கோ. 3	80	பாசனப்பயிர்—2,000
எக்ஸ் 3	80	மானாவரி — 900
எச்.பி. 1 (வீரிய ஒட்டுக்கம்பு)	85	பாசனப்பயிர்—3,850
ராகி கோ. 1	160	பாசனப்பயிர்—2,500 மானாவரி—900
கோ. 2	110	பாசனப்பயிர்—2,500
கோ. 7	100	பாசனப்பயிர்—2,600
கோ. 8	90	பாசனப்பயிர்—2,200

எச்.பி. 1 வீரிய ஒட்டுக் கம்பு மற்ற வகைகளைப் போல் இருமடங்கு விளைச்சல் கொடுக்கக்கூடியது. மேலும் கதிர்கள் ஒரே தருணத்தில் முற்றி ஒரே முறையில் அறுவடை செய்ய ஏற்றது.

ராகி விதைகளையும், எச்.பி. 1 கம்பு தவிர மற்ற எல்லா கம்பு விதைகளையும் உங்களுடைய வட்டார விவசாயக் கிடங்கிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். எச்.பி. 1 கம்பின் விதையை விதை கார்பரேஷன் மூலம் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பபோது கீழ்கண்ட ஏதாவது ஒரு ஒரு உற்பத்தியாளரும், விற்பனையாளருமானவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. கோயம்புத்தூர் விதை கார்பரேஷன், பேரூர் அஞ்சல், கோயம்புத்தூர்–10.
2. எஸ்ஸெம்பி விதை உற்பத்திப் பண்ணை, சிங்காரம்பாளையம் அஞ்சல், கிணத்துக்கடவு (வழி) கோவை மாவட்டம்.
3. டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி, உர இலாகா, கோயம்புத்தூர்–1.

கே: கார்த்திகை மாத மேழிச்செல்வம் இதழில் வந்த எச்.பி. 1 கம்பு பற்றிய கட்டுரையைப் படித்தேன். எங்கள் பகுதியில் எச்.பி. 1 கம்பு பயிர் செய்ய சரியான பருவம் எது ?

(டி. வித்தியாசேகர பாண்டியன், டி.வி. பழத்தோட்டம், மந்தித்தோப்பு கோவில்பட்டி.)

ப: எப்ரல் முதல் ஜூலை மாதம் வரை கோடைப் பருவத்தில் பாசனப் பயிராக பயிர் செய்யலாம்.

மண் வளமே மனை வளம்



குமாரசாமி

"மண்ணரிப்புத் தடுப்புத் திட்டத்தின் நோக்கத்தையும் பயனையும் விளக்கும் ஒரு சிறு நாடகம்"

காட்சி 1

இடம். குளத்தூர் ராமசாமி பிள்ளை வீடு.

(ராமசாமி காலை வேளையில் நிலங்களை சுற்றிவிட்டு பகல் நேரத்தில் வீடு திரும்புகிறார்).

ராமசாமி.—செண்பகம், செண்பகம் குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொண்டா.

(செண்பகம் ஒரு கலயத்தில் மோர் கொண்டு வந்து கொடுக்கிறாள்.)

ராமசாமி.—நான் கெட்ட கேட்டிற்கு மோரு ஒரு கேடா.

செண்பகம்.—ஏங்க இப்படி சலிச்சிக்கிறீங்க! இப்போ என்ன நடந்து விட்டது ?

ராமசாமி.—நான் என்னத்தை சொல்றது. என் மனக் கோட்டை எல்லாம் சரிஞ்சு மண்ணோடு மண்ணாய் போயிடுச்சு. இந்த வருசம் நல்லா விளையும்னு நினைச்சு கடன் வாங்கிட்டேன். நம்ம மகள் ராதா கலியாணமும் சிறப்பா நடத்தலாம்முன்னு நினைச்சு இருந்தேன். இப்போ எல்லாம் நாசமாய்போயிடுச்சு. நாமொன்னு நினைக்க தெய்வம் ஒண்ணு செய்யுது.

செண்.—ஏன் இப்படி புலம்பிகிட்டே இருக்கிறீங்க கொஞ்சம் விவரமாதான் சொல்லுங்களேன்.

ராம.—நேத்து பெய்த மழை நிலத்திலிருந்த மண் எல்லாத்தையும் அடிச்சுகிட்டு போயிடுச்சு. அதோடு இல்லாம சோளப்பயிரையும் அடியோடு நாசமாக்கிட்டு போயிடுச்சு. நிலத்தில் ஓடை ஓடையாய் அரிச்சுகிட்டு போயிருக்கு. இனிமே எப்படி சாகுபடி செய்து விளைச்சலை எடுக்கிறதுன்னு தெரியல்லே. நான் இந்த புஞ்சை நிலத்திலே விளையற சாகுபடியைத்தான் மலைபோல நம்பி இருந் தேன். அதுவும் என்னைக் காலைவாரி விட்டு டிச்சு. மழை பெய்யாமல் பாதி அழிஞ்சுது. மழை பெய்து பாதி அழிஞ்சுது. "பட்ட காலிலேபடும் கெட்ட குடியேகெடும்" என்ற பழமொழி சரியாய் போயிடுச்சு.

(இருவரும் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கும் சமயத் தில் அவர்கள் மகன் செந்தில்குமரன் வருகிறான்.)

செந்தில்.—என்னப்பா ! ரொம்பவும் கவலையும், களைப்பு மாய் காணப்படுறீங்க. ஒரு நாளும் இந்த மாதிரி கவலையாய் இருந்ததில்லையே. உடம்புக்கு ஏதாவது சௌகரியமில்லையா......

ராம.—உடம்புக்கு ஒன்றும் இல்லே. மனத்திற்குத்தான் ரொம்ப வேதனையாய் இருக்கு.

செ. கு.—மனசுக்கு வேதனை ஏற்படும்படி அப்படி என்ன நடந்தது. (ராமசாமி பிள்ளை நடந்ததை விவரமாக கூறுகிறார்.)

செ. கு.—(சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு) அப்பா, எனக்கு ஒரு யோசனை தோணுது. அதுபடி செஞ்சா என்ன !

ராம.—நீ என்ன சொல்லப்போறே?

செ. கு.—என்னுடைய நண்பர் ஒருவர் விவசாய இலா காவில் மண் வளப்பாதுகாப்பு திட்டத்தில் மேற்பார் வையாளராக பணியாற்றி வருகிறார். அவரைக் கலந்து யோசனை கேட்டா எல்லாம் விவரமாகவும் நன்மை உள்ளதாகவும் கூறுவார். நாளைக்கு அவரை நம்ம வீட்டுக்கு அழைச்சுகிட்டு வர்ரேம்பா. ஒன்றுக்கும் கவலைப்படாதிங்க.

காட்சி 2

(விவசாய பொறியியல் மேற்பார்வையாளர் செந்தில் குமரனுடன் வருதல்.)

கார்த்திகேயன்.—வணக்கம் ஐயா !

ராமசாமி பிள்ளை.—வணக்கம் தம்பி. என் மகன் செந்தில் குமார் எல்லா விஷயத்தையும் உங்ககிட்டே விவரமா சொல்லி இருப்பான்னு நினைக்கிறேன். இந்த மக சூலை நம்பித்தான் கடன் வாங்கினேன். கலியாணம் நடத் தலாம்னு திட்டம் போட்டேன். என் நம்பிக்கை எல்லாம் வீணாப்போயி டிச்சு தம்பி. நிராதரவான

நிலையிலே, கஞ்சிக்கே கடன் வாங்கர நிலையிலே இப்ப இருக்கிறேன். எல்லாம் நேத்து பெய்த அதிகமான மழையினால் வந்த வினைதான். நிலத்திலே இருக்கிற மண்ணும் போயி, விளைச்சலும் போயி கடன் வாங்கி நிலத்திலே போட்ட எரு எல்லாம் மழையிலே அடிச்சு கிட்டுபோயிடிச்சு. இனிமே எந்தப் பயிரும் செழுமையா வளராதபடி செஞ்சிடுச்சி. இது மாதிரி இன்னும் இரண்டு மழை பெஞ்சு மண்ணை அரிச்சுட்டுபோனா நான் வீட்டையும் காட்டையும் விட்டுட்டு எங்காவது பஞ்சம் பிழைக்கத்தான் போகணும். வேற வழியில்லே. இந்த நிலையிலே இருந்து கரை சேர வழி ஒன்றும் புரியல்ல தம்பி......................!

கார்த்தி.—ஒன்றுக்கும் கவலைப்படாதீங்க! நாளை காலையிலே நானும் நண்பர் செந்திலும் உங்கள் நிலத்தைச் சுற்றிப் பார்த்த பிறகு தேவையானதைச் செய்யலாம். அப்போ நான் வரட்டுங்களா.

ராம.—நல்லது! போயிட்டு வாங்க தம்பி.

(இருவரும் செல்கின்றனர்)

காட்சி 3

(செந்தில் குமாரும், மேற்பார்வையாளரும் நிலத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகின்றனர்)

சி.எஸ்.எச். 1 சோளம் விவசாயத்தில் விஞ்ஞான நோக்கை வலியுறுத்தி வெற்றிக்கு உறுதிதரும் ஒரு பொறுக்கு மணி.

கார்த்திகேயன்.—செந்தில்! உங்கள் அப்பா கூறியதுபோல் மழை நீர் உங்கள் நிலங்களை அதிகமாகவே பாதித்திருக்கிறது. சிறு சிறு ஓடைகளும் காணப்படுகின்றன. உங்கள் நிலம் மலைக்கு அடிவாரத்தில் இருக்கிறது. இரண்டு அடி முதல் மூன்று அடி சரிவு உள்ளது. அதனால் நான்கு அடி சரிவிற்கு ஒரு காண்டூர் வரப்பு என்னும் (சம உயர வரப்பு) போட்டு தேவையான நீரை நிலத்தில் தேக்கச் செய்து மீதி தண்ணீரை கலிங்கல் (Waste weir) மூலம் வெளியேற்றவேண்டும். பாதையோரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் உள்ள பக்க வரம்புகளில் (Side Bunds) மூலைக் கலிங்கு (Channel weir) கட்டுவதன் மூலம் தண்ணீர் பக்கவரம்புகளில் செல்லும்போது பக்க வரப்புகளை அரிக்காவண்ணம் பாதுகாக்கவேண்டும். இவ்வாறு செய்வதனால் மழை நீர் ஓட்டத்தை கட்டுப்படுத்தி அந்தந்த நிலங்களில் பெய்யும் மழை நீரை அங்கேயே தேக்கி விடலாம், அதிகமான தண்ணீர் கலிங்கல் மூலம் வெளியாகிறது. ஆதலால் மண்ணும் அடித்து செல்வதில்லை. எருச்சத்துகள் முதலியன அந்த நிலத்திலேயே தங்கி நிலத்திற்கு குன்றாத செழுமையும் சக்தியும் அளிக்கும். புஞ்சை நிலங்களில் இம்மாதிரி வரப்புகள் அமைப்பதன் மூலம் அனேக நன்மைகள் ஏற்படுகின்றன. அதிருக்கட்டும், இந்த கிணறு யாருடையது. ஏன் இப்படி தண்ணீர் இல்லாமல் வரண்டு கிடக்கிறது, இன்னும் சிறிது ஆழப்படுத்தி தண்ணீர் வருகிறதா என்று பார்ப்பதுதானே. இல்லையானால் வேறு இடத்தில் புதியதாக ஒரு கிணறு வெட்டலாமே. நிலத்தில் கிணறு வெட்டுவதற்கும் அல்லது ஆழப்படுத்துவதற்கும் சர்க்கார் நிறைய கடன் வசதி செய்து தருகிறது.

செ.கு.—அவ்வப்போது பெய்கின்ற மழை நீர் நிலங்களின் வழியாக சென்று நேரடியாக கிணற்றில் விழுவதால் ஆழம்குறைந்து நீர் ஊற்று மறைந்து கிணறு மேடாகிவிட்டது. நாங்களும் எவ்வளவோ தடவை சேறு எடுத்தபோதிலும் திரும்பவும் மேடாகிவிடுகிறது. அதனால் அப்படியே விட்டு விட்டோம்.

கார்த்தி.—அதோ அது என்ன? சிறு குட்டைபோல் காணப்படுகிறது.

செ. கு.—ஆமாம். அது ஒரு குட்டை தான். முன்பு எப்போதும் தண்ணீர் இருக்கும். தண்ணீர் இருந்த காலத்தில் அதற்கு கீழே உள்ள சுமார் 20 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு அதனுடைய தண்ணீர் போதுமானதாக இருந்தது. எங்களுடைய கிணற்றைப் போலவே அதிக வண்டல் மண் படிந்து குளம் மேடாகிவிட்டது. ஆதலால் அதுவும் கவனிப்பாரற்று கிடக்கிறது.

கார்.—நீ சொன்னவற்றில் இருந்தும், பார்த்ததில் இருந்தும் அவ்வப்போது பெய்யும் மழை நீரை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் அதன் போக்கிலேயே விட்டுவிட்ட மாதிரி தெரிகிறது. அதனால் வந்த வினையே இவ்வளவும். எனினும் இனியும் காலம் கடத்துவது சரியல்ல. நாளையே வேலையை ஆரம்பிப்போம். சரிதானே !

காட்சி 4

(சில நாட்கள் கழித்து ராமசாமி பிள்ளையும் அவர் மகன் செந்தில் குமாரும் நிலத்திற்கு வருகின்றனர்.)

கார்த்தி.—வணக்கம் ஐயா.

ரா. பிள்ளை.—வணக்கம் தம்பி. என்னமோ உன் பேச்சை கேட்டு மறுபடியும் நிலத்து மேலே கடன் வாங்கி செலவு செய்திருக்கிறேன். என்னுடைய வாழ்வும் தாழ்வும் நீங்க போட்ட வரப்புகளின் நன்மையைப் பொறுத்திருக்கிறது.

கார்த்தி.—நீங்க ஒன்னுக்கும் கவலைப்படவேண்டாம். எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன். வாங்க இப்ப உங்க நிலத்தை சுத்தி பாத்துட்டு வரலாம்.

(கார்த்திகேயன் ஒவ்வொன்ருக காண்பித்து விளக்கம் கூறுகிருர்.)

கார்த்தி.—அதோ அந்த மலையில் இருந்து வருகிற தண்ணீர்தான் உங்க நிலத்திற்கு கேடு விளைவிக்கிறது. அந்த நீரை ஒதுக்கமாகக் குளத்திற்குப் போகக் கால்வாய் வெட்டியுள்ளோம். இனிமேல் பாருங்கள் உங்கள் குளத்திலும் தண்ணீர் தேங்கும். நிலத்திற்கும் சேதமிருக்காது.

இரண்டாவதாக நான்கு அடி சரிவிற்கு ஒரு கரை வீதம் கரைகள் அமைத்திருக்கிறோம். இது சம உயரக் கரைகள் ஆதலால் எல்லா இடத்திலும் தண்ணீர் ஒரே சீராக நிற்கும். அதிக நீர் பக்கக்கரைகள் மூலமாகவும் அதோ அங்கு தெரிகிற கலிங்கல் மூலமாகவும் பாதுகாப்பாக வடிந்துவிடும். ஆதலால் நாம் போடுகின்ற எரு முதலியன அடித்து செல்லாமல் தடுக்கப்பட்டு நிலத்திலேயே தங்கி பயிருக்கு செழிப்பையும், சக்தியும் கொடுக்கிறது. ஆதலால் நிலத்திற்கும், கரைகளுக்கும் எவ்வித ஆபத்தும் கிடையாது.

செ.கு.—நண்பரே! நீங்கள் எங்களுக்கு செய்த உதவியை என்றும் மறக்கமாட்டோம்.

கார்த்தி.—நன்றி சொல்வது இருக்கட்டும். கரைக்குப் பக்கத்தில் எட்டு அடி இடைவெளி விட்டிருக்கிறோம் அல்லவா. அதில் பாதி அளவு மண்ணையும் குழிக்குப் பக்கத்தில் இருக்கும் மண்ணையும் வெட்டி முதலில் குழியை நிரப்பி சமமாகச் செய்யுங்கள்.

காட்சி 5

(குளத்தூர் ஊர்ச்சாவடி முன்பு வழக்கமாக பல விவசாயிகள் ஒன்று கூடி தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர்.)

சுப்பையா.—என்ன கந்தையா! நம்ம ராமசாமி யாரோ ஒரு ஆபிசரு பேச்சைக் கேட்டு தன்னுடைய நிலத்தில் ஏரிக்கரை மாதிரி கரை போட்டிருக்கான். போதாதற்கு நிலத்திலுள்ள மண் எல்லாத்தையும் எடுத்து கரையிலே போட்டிருக்கான் என்ன ஆகுமோ தெரியல்லே! வெள்ளாமை வீடு வந்து சேருமான்னு சந்தேகம்.

கருப்பையா.—அது ஒரு பக்கம் இருக்கட்டும் ஐயா. ஏற்கனவே ராமசாமி நிலத்து மேலே கடன் வாங்கி வெள்ளாமை செய்தான். எல்லாம் ஆத்துலே கரைச்ச பெருங்காயம் மாதிரி போயிடுச்சு. திரும்பவும் அந்த ஆபிசர் பேச்சை கேட்டு பண்ணையார்கிட்டே கடன் வாங்கி என்னென்னமோ செஞ்சிருக்கான். ஆச்சு, அடுத்த மாசம் கிஸ்தி வசூல் பண்ண கணக்கு பிள்ளை மணியகாரரோடு வந்து வீட்டு வாசல் முன்னே சத்தம் போடப் போராங்க. இன்னும் எதை வித்து கொடுக்கப்போருனே தெரியலே. எல்லாம் அவனவன் தலையிலே எழுதின படி நடக்குது. அதுக்கு நாமென்ன செய்யறது.

ராமையா.—அந்தக் காலத்துலே நம்ம பாட்டன்மார்கள் இவ்வளவு பெரிய கரையா போட்டார்கள். அப்போ எல்லாம் நல்ல விளைச்சல் விளையலலே? அப்போ ரூபாய்க்கு 10 படி வித்துச்சு, இருந்திருந்தும் ராமசாமிக்கு ஏன்தான் இப்படி புத்திகெட்டு போச்சோ. நாமெல்லாம் இருந்தோம் நம்மகிட்டே ஒரு பேச்சு கேட்டானு. யாரோ ஒருத்தன் சொன்னுன்னு அவன் பேச்சை நம்பி செஞ்சுட்டான், நாளைக்கு இவனுக்கு கை கொடுக்கறது நாமதானே. அழகா சின்னக் கரையா நாலு பக்கமும் போட்டா நாமென்ன வேண்டாமுன்ன சொல்லப்போறோம். இனி ராமசாமி தலைதூக்க முடியாதபடி அந்த ஆபிசரு செஞ்சுட்டான். நம்ப குப்புசாமி ராவோடு ராவாக ஊரை விட்டு போனனே அந்தக் கதைதான் ஆகும்போல இருக்கு.

(அப்போது ராமசாமி பிள்ளையும் அவருடைய மகன் செந்தில் குமரனும் வரவே பேச்சு தடைப்படுகிறது. எல்லோரும் எழுந்து செல்கின்றனர்.)

காட்சி 6

(ராமசாமி பிள்ளை மற்ற விவசாயிகளைப்போலவே நிலத்திலுள்ள மீதி பயிர்களை அறுவடை செய்த பிறகு அடுத்த சாகுபடிக்கு நிலத்தை உழுது கொண்டு இருக்கிருர்)

கார்த்தி.—வணக்கம் ஐயா!

ராம.—வணக்கம் தம்பி! நாம் கரைபோட்ட அதிர்ஷ்டம் இதுவரைக்கும் மழையையே காணோம். எனக்கு ஒரே பயமாய் இருக்கு. ஆண்டவனே நம்பித்தான் இப்போ விவசாயம் செய்யப்போறேன். இந்தத் தடவைமட்டும் நல்லா விளையல்லே இந்த ஊரிலே நீங்க இனிமே எங்களைப் பார்க்கவே முடியாது.

கார்த்தி.—ஏன் அப்படிச் சொல்றீங்க. நினைப்பதை நல்லதாகவே நினைப்போம். நல்லதை எதிர் பார்ப்போம். இதோ பாருங்கள் சரிவிற்கு குறுக்காக கரைகள் போட்டு இருக்கிறோம். நீங்கள் உழவதும் சரிவிற்கு குறுக்காக இருக்கவேண்டும். முதலில் எப்படி உழுதாலும் கடைசி உழவு வரப்புக்கு இணையாக உழுதல் வேண்டும். இது மழைத் தண்ணீரின் வேகத்தை குறைக்கும்.

ராம.—ஆஹா, நன்றாக விளங்குகிறது, தம்பி.

கார்த்.—இன்னொன்று கேளுங்கள். பயிர்செய்யும் முறைகளிலும் சில மண்ணரிப்புத் தடுப்பு முறைகளைக் கையாளவேண்டும்.

(அடுத்த சில நாட்களில் மழை பெய்யத் தொடங்குகிறது. மலையிலிருந்து வருகின்ற தண்ணீர் கால்வாய் வழியாக குளத்திற்கு செல்லுகின்றது. மழைநீர் நிலத்தில் தங்கி பயிர்களுக்கு ஈரத்தை அளிக்கிறது. அதிகமான தண்ணீர் கலிங்கல் வழியாகவும், முனைக்கலிங்கு வழியாகவும் வெளியேறுகிறது. அதனால் பயிர்கள் நிலத்தில் செழு செழுப்பாகவும், பசுமையாகவும் நின்று ஒரு அழகைத் தருகிறது.)



எட்டுக்கதிர் மட்டுமல்ல இதற்கு மேல்தான் ஒரு தூரில் இருக்கும் கம்பில் பொறுக்கு மணி எச்.பி. 1.

காட்சி 7

(ராமசாமி பிள்ளையைக் கேவலமாகப் பேசிய விவசாயிகள் சிலர் மறுபடியும் ஒன்றுகூடியுள்ளனர்.)

ஒருவர்.— என்ன ராமையா! நாம் உண்மையிலேயே மோசம் போயிட்டோம். காலையிலே நிலத்தை சுத்தி பார்க்கறப்போ என் வயிறு எல்லாம் பத்தி எரிய மாதிரி ஆயிடுச்சி! நிலத்திலிருந்து செக்கச் செவேன்னு தண்ணீர் ஓடறப்போ என் ரத்தமே ஓடற மாதிரி எனக்கு தோணிச்சு. ராமசாமி கிட்டேதான் இப்போ புறப்பட்டு கிட்டு இருக்கிறேன்.

மற்றவர்.— உன் நிலம் எவ்வளவோ பரவாயில்லை. என்னுடைய நிலத்துலே மண்ணுன்னு சொல்ல ஒன்றுமே இல்லை. பாறையும், மொரம்புமாத்தான் கிடக்குது. அதையாவது காப்பாத்திட ராமசாமி கிட்டே போய்த்தான் ஆகவேணும். [எல்லோரும் ராமசாமி பிள்ளையை அழைத்துகொண்டு ராமசாமி பிள்ளையின் நிலத்தை பார்க்க செல்லுகின்றனர்.]

ஒரு.— அந்த ஆபீசரு சின்னவனா இருந்தாலும் அவன்கிட்டே நிறைய சரக்கு இருக்குதண்ணே! நமக்கு இவ்வளவு வயசு ஆகி என்ன பிரயோஜனம். உழைக்கறதும், யோசனை இல்லாம எதையாச்சும் செஞ்சிட்டு கடைசியிலே அவதிப்படறதும் தான் கண்ட பலன். கரை போட்டப்புறம் ராமசாமி கொல்லையை பார்க்கரதுக்கே ஒரு அழகா இருக்குது அண்ணே! நிலம் பாரு எவ்வளவு தூரம் ஈரம் கட்டி நிக்குது. பயிரு பாரு செழுசெழுன்று ஆளு உயரத்துக்கு நிக்குது.

மற்.— ராத்திரி அவ்வளவு மழை பெஞ்சும், சேதமேயில்லியே! நிலத்திலே கொஞ்சம் தண்ணீரை கூட காணோம். ஆமாம் அது என்ன அந்த இடத்திலே ஒரே தண்ணீர் மயமா இருக்குது.

ஒரு.—என்னுடைய வயசிலே இத்தனை தண்ணியை இந்த குளத்திலே பாத்தது கிடையாது. எல்லாம் ராமசாமியின் கைங்கரியம்தான்.

(தூரத்தில் கார்த்திகேயனும், செந்தில்குமரனும், ராமசாமியும் வருவதை விவசாயிகள் அனைவரும் பார்க்கின்றனர்.)

ஒரு.—ராமசாமி எங்கள் எல்லோருக்கும் நீ ஒரு உபகாரம் செய்வியா?

ராம.—அண்ணா, உங்களுக்கு இல்லாத ஒரு பாத்தியம் வேறு யாருக்கண்ணா இருக்கப்போவுது. தாராளமா கேளுங்க. உங்க உதவியாலே தானே நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்தேன்.

மற்.—மண்வள பாதுகாப்பு திட்டத்தினால் ஏற்படுகின்ற நன்மையும், அதைத் தவிர்ப்பதனால் ஏற்படுகிற தீமையும் நாங்கள் கண்கூடாக கண்டறிந்தோம். எங்களுடைய அறியாமை என்ற கண்கள் இன்று திறந்தன. ஆதலால் எல்லோருடைய நிலங்களுக்கும் இம்மாதிரி விஞ்ஞான ரீதியான வரப்புகளை போட்டுத் தர சொல்லி ஏற்பாடு செய்யணும். அந்த சூப்ரவைசர் தம்பியிடம் நீதான் சொல்லவேணும். இப்போ எப்படி நாங்க அவர் மூஞ்சியைப் பாத்து கேக்கறது?

பூசா சவானி வெண்டை வெற்றிக் கதை

நெல் பயிரிட்டோ, கரும்பு, திராட்சை முதலிய வாணிபப் பயிர்களைச் சாகுபடி செய்தோதான் விவசாயத்தில் நல்ல வருமானம் பெற முடியும் என்பதல்ல. காய்கறிகள் பயிரிட்டும் கணிசமான வருவாய் பெறமுடியும் ; பெற வழி இருக்கிறது.

எக்கருக்கு ரூ. 3,800 என்ற அளவில், அதுவும் மூன்றரை மாதங்களில் வருமானம் கிடைத்திருக்கிறது— 'பூசா சவானி' என்ற வெண்டை பயிரிட்டதன் மூலம், கிருஷ்ணகிரி பகுதியில், இச்சாகுபடி செய்து வெற்றிகண்ட கே. பெருமாள், ஆர். பத்மநாபன், சி. சாமிக்கண்ணு ஆகியோர், மற்றவர்களும் தங்களைப் போன்று வெற்றி காண கீழ்க்கண்ட குறிப்புகளைத் தருகிருர்கள் ; தாங்கள் செய்தவை என்னவென்பதை விவரிக்கிருர்கள்.

பத்து குறிப்புகள்.

1. நிலத்தை நான்கு முறை உழுது புழுதியாக்கினேம்.

2. எக்கருக்கு 20 வண்டி வீதம் தொழு உரமிட்டோம். பின் உழுது விட்டோம்.

3. பார் கலப்பையைக் கொண்டு, இரண்டு அடிக்கு ஒரு பார் வீதம் கட்டி செம்மைப்படுத்தினேம்.

4. 'பூசா சவானி' என்ற வெண்டை விதையை இரண்டிரண்டாக ஒரு அடி இடைவெளியில் நட்டு, தண்ணீர் பாய்ச்சினேம்.

5. நட்ட 8-ம் நாளிலிருந்து செடி பூக்கும் வரை வாரம் ஒரு முறை யூரியாவை, தண்ணீரில் (ஐந்து காலன் தண்ணீரில் ஒரு ராத்தல் என்ற விகிதத்தில்) கலந்து தெளித்தோம்.

6. 3-வது வாரத்தில் அடிக்கு இரண்டு செடிகள் முளைத்திருக்கும் இடங்களில் திடமான ஒரு செடியை விட்டு விட்டு, மற்றைய செடியைப் பிடுங்கி விட்டோம்.

7. விதைத்த 30-ம் நாள், எக்கருக்கு 150 கிலோ வீதமும், 45-ம் நாள் எக்கருக்கு 120 கிலோ வீதமும், கலப்பு உரம் நெம்பர் 2 வைத்தோம்.

8. உரம் வைப்பதற்கு மூன்று தினங்களுக்குமுன், இரண்டு முறை 'களை' எடுத்து கொத்திவிட்டோம்.

9. தத்துப்பூச்சி, அசுவினி போன்ற பூச்சிகள், பயிரைத் தாக்காதிருக்க பாரத்தியான் என்னும் பூச்சி மருந்தை யூரியா கரைசலுடன் 3-வது வாரத்திலிருந்து மும்முறை தெளித்தோம்.

10. தண்ணீர் தேவையானபோது பாய்ச்சினேம்.

நோயற்றுச் செழித்து வளர்ந்திருந்த இப்பயிரைப் பார்த்து வியக்காதவர் யாருமில்லை. நீண்ட, பச்சை நிறமான இக்காய்கள் பார்வைக்குக் கவர்ச்சியாக இருக்கின்றன. நல்ல ருசியுமிருப்பதால் இக்காய்கள் விரைவில் விற்பனையாகி விடுகின்றன. கிராக்கியோடு, கிலோ 50 காசு வீதம் விற்பனை செய்யப்பட்டது.

விதைத்த 47-ம் நாளிலிருந்து காய் பறிக்கத் துவங்கினேம். அநேகமாக ஒருநாள் விட்டு ஒருநாள் பறித்தோம். 10 செண்டு நிலத்தில் எங்களுக்குக் கிடைத்த காய்கள் 606 கிலோ ; விதை 10 கிலோ. இரண்டினையும் விற்றுக் கிடைத்தது ரூ. 383. அதாவது, எக்கருக்கு ரூ. 3,800.

தற்போதும் இம்முறையில் நாங்கள் பயிர் செய்து வருகிருேம். தற்போது உள்ள பயிரின் வயது 93 நாட்களே. இன்னும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கிறது. நிச்சயம் எக்கருக்கு ரூ. 3,800-க்குக் குறையாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடிருக்கிருேம்.

சத்தில்லாத சரளையும் தழைச்சத்தே இல்லாத மணற்பாங்குமான எங்களது பண்ணை நிலத்தில் கிடைத்த மகசூலே இவ்வளவு என்ருல், நல்ல நிலங்களில் இன்னும் அதிக வருவாயை இப்பயிர் தரும் என்பதில் ஐயமில்லை.

உற்பத்தியைப் பெருக்க, உணவுப் பற்ருக் குறையை நீக்க, தங்கள் வருமானத்தைப் பெருக்க 'பூசா சவானி' வெண்டையை உழவுப் பெருமக்கள் பயிரிடுவார்கள் என்பது திண்ணம்.

(பொதுஜனத் தொடர்பு அதிகாரியால் வெளியிடப்பட்டது.)

1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய காலநிலை அறிக்கை.

(சி. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம்மாதம் முதல் இரண்டு நாட்களில் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் சற்று மழை இருந்தது. அடுத்த இரண்டு நாட்களில் ஒரு சில இடங்களில் தூரல் இருந்தது. 9, 18, 19, 20, 21, தேதிகளில் அங்குமிங்கும் மாத்திரம் தூரல் இருந்தது. மற்றய நாட்களில் வரட்சியே நிலவியது. ஏறக்குறைய எல்லா மாவட்டங்களிலும் பகல் சீதோஷ்ணத்தில் ஊசல் காணப்பட்டது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் அநேக இடங்களில் மழையிருந்தது. சீமை யகத்தி போன்ற பசுந்தாளுரப் பயிர்கள் நன்மையடைந்தன. இம்மழை T.M.V. 2 வேர்கடலை அறுவடைக்கும் தோட்டக்கால் எள் விதைப்புக்கும் சாதகமாக இருந்தது. முன் விதைத்த சொர்ணவாரி நெல் நடப்பட்டது. பின்பட்டத்திற்கும் நாற்றுவிடப்பட்டது. குறிப்பிடத்தகுந்த அளவில் பூச்சிகளோ, வியாதிகளோ காணப்படவில்லை.

வட ஆற்காடு மாவட்டத்திலும் மழை இருந்தது. இதனால் கரும்புக்கு நல்ல பலன் இருந்தது. சிறிதளவு குறுத்துப் பூச்சிகள் தோன்றவே தகுந்த முறைகொண்டு அவை போக்கடிக்கப்பட்டன.

தென்னாற்காடு மாவட்டத்தில் மழையுடன் புயல்காற்றும் சேர்ந்து அடித்தது. இதனால் வாழை, கிளிரிசீடியா பசுந்தாள் மரங்கள், கரும்பு முதலிய பயிர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டன. தோட்ட வேர்கடலைக்கு மழை நல்ல நன்மையளித்தது. எள்ளில் கொக்கிப் புழுக்களும், சாம்பல் தோப், இலைப்புள்ளி நோய் முதலியனவும் தோன்றி, இவை தகுந்த முறைகள் கொண்டு தவிர்க்கப்பட்டன.

தஞ்சை மாவட்டத்தில் சிறிது மழையிருந்தது. பசுந்தாள் உறப் பயிர்கள், பருத்தி முதலியன இம்மழையால் பயனுற்றன. பெருமளவு பூச்சிகளோ வியாதிகளோ இல்லாவிட்டாலும், எலிகளைப் போக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து கையாளப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில் சிறிது தூரல் இருந்தது. இது மிகக் குறைவாக இருந்தும் நெல், ஆமணக்கு, எள், வேர்கடலை முதலியவைகளுக்கு நன்மையளிப்பதாய் இருந்தது.

மதுரை மாவட்டத்தில் பெய்த மழை மிகமிகக் குறைவு. இருந்தும் பூமிகளை உழுது வைப்பதற்கு இது உதவிற்று. இராமநாதபுரம் மாவட்டத்திலும் மழை கொஞ்சமே. இதுவும் பூமியை உழுவதற்கும் கரும்பு நடுவதற்கும் மிக உதவிற்று. இம்மாவட்டங்களில் குறிப்பிடத்தகுந்த அளவில் பூச்சியோ வியாதியோ காணப்படவில்லை.

நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவில் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் கொஞ்சம் மழையிருந்தது. இது பூமியில் இருக்கும் வெள்ளைச் சோளப் பயிருக்கு நன்மையளித்தது. பருத்தியில் தத்துப்பூச்சிகள், அசுகு, காய்த் துளைப்பான்கள், பேன், கிளைகாய்தல் நோய் முதலியனவும், வெள்ளைச் சோளத்தில் துளைப்பான்கள், பேன், கொள்ளை நோய் முதலியனவும் கண்டன. ஆகையால் தகுந்த முறைகளைக் கொண்டு இவற்றைத் தடுக்க அவசியமேற்பட்டது.

சேலம் மாவட்டத்திலும் போதிய மழையிருக்கவில்லை. எனினும் பூமிகளை உழ இது பயன்பட்டது. பாசன வசதியுள்ள இடங்களில் நெல் நாற்றும் விடப்பட்டது. ஏற்கனவே நாற்றுங்காலில் உள்ள நெல் நடவும் செய்யப்பட்டது. நாமக்கல் பகுதிகளில் தோட்டச் சோளம் விதைக்கப்பட்டது. மிளகாய் நாற்றும் நடப்பெற்றது. நெல்லில் தத்துப் பூச்சியும், சோளத்தில் பேனும், துளைப்பானும், பருத்தியில் தத்துப் பூச்சியும், மிளகாயில் திரிப்ஸ் பூச்சியும், காய்த் துளைப்பானும் ஏற்பட்டன. பருத்தியில் கிளை காய்தல் நோயும், வேர்கடலையில் இலைப்புள்ளி நோயும், மிளகாயில் இலைப்புள்ளி நோய், காய் அழுகல் நோய் முதலியவை கண்டு தகுந்த முறைகளைக் கொண்டு நிவர்த்திக்கப்பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் போதிய மழையின்மையால் சில இடங்களில் மாத்திரம் பூமிகளை உழுக முடிந்தது. பாசன வசதிக் குறைவான சோளம், பருத்தி முதலியவை சுமாராகத்தான் இருந்தன. பூச்சிகளும், வியாதிகளும் வெகுவாகக் காணப்படவில்லை.

நீலகிரி மாவட்டத்தில் பற்றுக்குறை மழையிருந்தது. இது உருளைக்கிழங்கு, காய்கறிகள் முதலியவற்றிற்கு ஓரளவு நன்மை தந்தது. பெருமளவு பூச்சிகளோ, வியாதிகளோ தென்படவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் போதிய மழையில்லை. அதனால் பசுந்தாளுரப் பயிர்களும், உளுந்துப் பயிரும் பாதிக்கப்பட்டன. வெகுவாகப் பூச்சி, வியாதி எதுவும் காணப்படவில்லை.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண். (1)	தேதி. (2)	இடத்தின் பெயர். (3)	மழையளவு. (4)
1	1–5–66	பானூர்	238·0
2	1–5–66	சென்னை (மீனம்பாக்கம்)	87·0
3	1–5–66	திண்டிவனம்	98·3
4	2–5–66	உதகமண்டலம்	77·5

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண். (1)	பிராந்தியத்தின் பெயர். (2)	பெய்த மழை அளவு. (3)	சராசரியில் இருந்து மாறுபாடு. (4)	குறிப்பு. (5)
1	வட பிராந்தியம்	86·8	+38·7	அதிகம்.
2	கீழ்க்கரைப் பிராந்தியம் ..	89·0	+46·9	அதிகம்.
3	மத்தியப் பிராந்தியம் ..	34·1	—60·1	மிகக்குறைவு.
4	தென் பிராந்தியம் ..	19·2	—46·0	மிகக்குறைவு.
5	மலைப் பிராந்தியம் ..	58·[illegible]	[illegible]112 2	மிகக்குறைவு.

1966-ம் ஆண்டு மே மாத மழையளவு
(மில்லிமீட்டர்களில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மழை அளவு. (2)	சராசரியில் இருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1ம் தேதி முதல் மொத்த மழையளவு. (4)
வட பிராந்தியம்—			
சென்னை (மீனம்பாக்கம்) ..	89·0	+63·2	113·0
திருர்குப்பம்*	86·4	+45·9	96·6
வேலூர்	108·0	+50·2	111·0
குடியாத்தம்*	63·7	—4·6	66·2
கீழ்க்கரைப் பிராந்தியம்—			
பாலூர்*	244·1	+219·4	306·7
திண்டிவனம்*	98·3	+64·7	111·0
கடலூர்	31·0	+5·6	92·0
நாகப்பட்டினம்	46·0	+6·1	93·0
ஆடுதுறை*	68·1	—4·6	109·8
பட்டுக்கோட்டை*	46·7	—3·8	172·2
மத்தியப் பிராந்தியம்—			
சேலம்	54·0	—62·8	132·0
சேலம்*	66·6	—38·9	140·1
கோயமுத்தூர்*	41·1	—34·8	123·9
கோயமுத்தூர்	22·0	—40·7	100·0
ஆலியார் நகர்*	13·8	—124·3	26·7
திருச்சிராப்பள்ளி	7·0	—59·3	52·0
தென் பிராந்தியம்—			
மதுரை	..	—69·6	64·0
பாம்பன்	30·0	+5·4	227·0
கோவில்பட்டி*	38·9	—13·4	127·6
பாளையங்கோட்டை ..	19·0	—22·4	125·0
அம்பாசமுத்திரம்* ..	3·8	—66·1	94·7
நாகர்கோயில்*	33·0	—146·3	68·5
கன்னியாகுமரி*	10·0	—9·6	66·6
மலைப்பிராந்தியம்—			
கொடைக்கானல்	26·0	—135·8	180·0
கூனூர்*	38·1	—90·9	499·6
உதகமண்டலம்*	92·2	—123·4	259·3
நஞ்சநாடு *	78·5	—98·5	233·4

குறிப்பு.—*சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

இதைத் தடுக்க வேண்டாமா?

'ஏறக்குறைய இருக்கட்டுமே' என்று நமது விவசாயிகள் விதையை நெல்லாகட்டும், ராகியாகட்டும் அல்லது சோளம், கம்பு எதுவாகட்டும்–விதைப்புக்கு வள்ளம் வள்ளமாகக் கொட்டுகின்றனர். இது விதையை வீணாக்குவது மட்டு மல்ல, நல்ல செழித்த பலமான நாற்றுகளாக நாற்றங் காலில் நாற்றுகள் வளர்வதையும் கெடுக்கிறது.

உதாரணமாகப் பாருங்கள் சாதாரணமாக நமது விவ சாயிகள் நாற்றங்காலில் நெல் விதைக்கும் அளவு ஒரு ஏக்கரில் பயிரிட சுமார் பதினாறு முதல் இருபது வள்ளம். அதாவது 80 சிறிய படி அல்லது 40 பட்டணம் படி. கிலோவில் கணக்கிட்டால் சுமார் 50 கிலோ. 50 கிலோ நல்ல விதை விதைத்தால் குறைந்தது $2\frac{1}{2}$ ஏக்கருக்கு நாற்று காணும். எவ்வளவு விரயம்!

இந்த விரயத்தையெல்லாம் இந்தியா முழுமைக்கும் கூட்டினால் 2 கோடி பெறுமானமுள்ள நெல்லை ஒவ் வொரு ஆண்டிலும் மண்ணுக்குள் கொட்டி வீணடிக் கிறோம்.

இந்த விரயத்தைத் தடுக்க வேண்டாமா?

மரம் நடுவாரமும், கம்போஸ்ட் உற்பத்திப் பெருக்க வாரமும்.

ஜூலை முதல் வாரம் மரம் நடுவிழா தொடக்க வாரம். தழைச் சத்துக்காகவும், எரிக்கும் விறகுக்காகவும், நிழ லுக்காகவும், இன்னும் பல உபயோகங்களுக்காகவும், முடிந்த இடங்களிலெல்லாம் மரங்களை நடுவது நல்லது. இதன் முக்கியத்துவத்தைக் காட்டவே மரம் நடுவாரம் (வன மகோத்சவம்) கொண்டாடப்படுகிறது.

இதே வாரத்தில் (ஜூலை முதல் வாரம்) கம்போஸ்ட் உற்பத்திப் பெருக்க வாரமும் கொண்டாடுவது மிகப் பொருத்தமாகும். நிலத்தின் வளத்தைப் பாதுகாப்பதற்கு இயற்கை எரு முக்கியம். கழிவாகி வீணாகின்ற இயற்கைப் பொருள்களை நிலத்திற்குப் பயனுள்ள எருவாக்குவதற்கு கம்போஸ்ட் தயாரிப்பது சிறந்தவழி. தழைகள் கிடைப்பதை அதிகரிக்க மரம் நடுங்கள். கிடைத்த கழிவுகளைச் சிறந்த எருவாக்க கம்போஸ்ட் தயாரியுங்கள்.

வனமகோத்சவம்,

கம்போஸ்ட் உற்பத்தி,

ஜூலை முதல் வாரம், மக்களுக்கு இந்த இரண்டையும் நினைவூட்டும் வாரம்.

விவசாயச்செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



முழுவதும் நம் எஞ்சீனியர்களாலேயே அமைக்கப்பட்டு, நமது நாட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே செய்யப்பட்ட விசை டிரில்லர். கோயமுத்தூர் விவசாயக் கல்லூரிக்குச் சேர்ந்த பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவினர் தயாரித்தது இது.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966

மூன்று மந்திரங்கள்

நல்ல விதை

போதிய அளவு உரங்கள்

பயிர்ப் பாதுகாப்பு

இம் மூன்றும் விவசாயத்தில் வெற்றிக்கு மந்திரங்கள். இவற்றில் எதையும் புறக்கணிக்க முடியாது.

நல்ல விதை :

பொறுக்கு விதைகளைத் தேர்ந்தெடுத்தால் மட்டும் போதாது. விதைப்பதற்கு முன் நோய்த் தடுப்புக்காக அக்ரோசான் போன்ற மருந்துடன் கலக்குதல் அவசியம். செழித்த பயிருக்கு குறைந்த அளவு விதையையே உபயோகிக்க வேண்டும்.

உரங்கள் :

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து, இவை மூன்றும் போதிய அளவு வேண்டிய தருணத்தில் போடவேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு :

பூச்சியோ, நோயோ வந்து பரவியபின் அதிகம் செலவு செய்வதைவிட முன்னெச்சரிக்கையாக மருந்தடிப்பது அவசியம்.

நல்ல மகசூலுக்கு நன்கு விளைந்த தேர்ந்த விதையாக எடுத்து பத்திரமாக வைத்திருத்தலும் முக்கியம்.



தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.